REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 27 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 125 | Monday 27, May, 2024 | 16பக்கங்கள் | 50/-

## இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவர் உயிரிழப்பு



இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவர் Jean Francois Pactet ராஜகிரியிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

53 வயதுடைய மேற்படி பிரான்ஸ் தூதுவரின் சடலம்

06

# யாழில் முன்னர் நிலவிய கல்வி முறை மீண்டும் உருவாக்கப்படும்

### ஆசிரிய நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**"யாழ்ப்பாண ஆசிரியர் பாரம்பரியம்" நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்வதாகவும் பாராட்டு**




ஆசிரியர் தொழிலின் கண்ணியத்தைக் காப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட "யாழ்ப்பாண ஆசிரியர் பாரம்பரியம்" நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்வதாகவும், அந்தக் கல்வி முறையை மீளமைக்க தாம் செயற்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஆசிரியர் தொழில் முன்மாதிரியாக இருக்க வேண்டும் எனவும், ஆசிரியர்கள் கோசங்கள் எழுப்பிக் கொண்டு வீதியில் ஆர்ப்பாட்டம் செய்வதாக இருந்தால் மாணவர்களால் நிராகரிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, தொழில் கௌரவத்தைப் பேணுவது அனைத்து ஆசிரியர்களினதும் பொறுப்பு எனவும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (25)

06

### அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில்



## தாமரைக் கோபுரத்தில் பிரித் பாராயண நிகழ்வு

**வரலாற்றில் முதல் முறையாக இடம் பெற்றது**



தெற்காசியாவின் மிக உயரமான தொடர்பாடல் கோபுரமான கொழும்புதாமரைக் கோபுர வரலாற்றில் முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட பிரித் பாராயண நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கு அமைவாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனமும் இணைந்து வெசாக் பண்டிகையையொட்டி நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லாசி வேண்டி இந்த பிரித்பாராயண நிகழ்வை ஏற்பாடு செய்ததுடன் தேசிய தொலைக்

06

## சி.வி.விக்னேஸ்வரனின் நலம் விசாரிக்கச் சென்ற ஜனாதிபதி



சுகயீனமுற்றுள்ள வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் நலன் விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்றார். யாழ்ப்பாணத்திலுள்ள விக்னேஸ்வரனின்

06

## சொத்துக்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு; ஜூலை முதலாம் திகதி அமுல்

### புதிய சட்டமொன்றை அமுலாக்குவது நோக்கமல்ல



நாட்டின் பிரஜைகளின் சொத்துக்கள் தொடர்பான தகவலை பெற்றுக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு புதிய சட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதாக அமையாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த கால அழுத்தங்களுடன் செயல்படுத்தாமல் வரி செலுத்தத் தவறுவோரை இனங்காணும் எதிர்பார்ப்பு டனேயே இந்த வர்த்தமானி அறிவிப்பு செயற்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரஜைகளின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் தேசிய இறைவரி திணைக்களத்திற்கு கண்டிப்பாக வழங்க வேண்டும் என தெரிவித்து மேற்படி

06

## அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதியை பயன்படுத்தாத அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள நிதியை இதுவரை உபயோகப்படுத்தாத அரச அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல வருடங்களுக்குப் பின் மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 12 பில்லியன் ரூபாவை இந்த வருடத்திற்காக ஒதுக்கியுள்ளது. இந் நிலையில் சில மாவட்டங்களிலுள்ள அதிகாரிகள் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்ற போர்வையில், மேற்படி வேலைத்திட்டங்களை சீர்குலைத்து வருவதை அவதானித்து வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்களாக வங்குரோத்து நிலையில்

06

## ஜனாதிபதிக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம்

### நாடு மோசமடைய இடமளிக்க கூடாது - வஜிர அபேவர்தன



நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

06

## தோட்டத் தொழிலாளரின் சம்பள அதிகரிப்பு; ஜனாதிபதி பெற்றுக் கொடுப்பது உறுதி - மனுஷ



பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். இந்த முடிவுக்கு உடன்

06

## 'ரீமால்' அதி தீவிர சூறாவளியாக உருவெடுப்பு கடும் காற்று, மழை, கடல் கொந்தளிப்பு

### வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்கு வங்காள விரிகுடாவில் நிலை கொண்டிருந்த ரீமால் சூறாவளி நேற்று அதிகாலை அதி தீவிர சூறாவளியாக உருவெடுத்துள்ள நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடல் கொந்தளிப்பாக காணப்படும் என தெரிவித்துள்ள வளிமண்டலவியல்

06

## டெங்குநோய் பரவல் தொகையில் அதிகரிப்பு

### ஒரு வார காலம் டெங்கு ஒழிப்பு வாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அதற்கிணங்க தற்போது நாடளாவிய

06

## ISIS உடன் தொடர்புடைய நபரைத் தேடி வலைவீச்சு

### பொதுமக்களின் உதவி கோரும் பொலிஸார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளான இலங்கையர்களுடன் தொடர்புடைய தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அதற்காக பொதுமக்களின் உதவியையும் நாடியுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஐ.எஸ்.

06

## சீரற்ற காலநிலையால் இதுவரை 08 பேர் மரணம்

### தாழ்நில பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

18 மாவட்டங்களில் 12,197 குடும்பங்களை சேர்ந்த 45,344 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

06

### தொழில் பெற்றுத் தருவதாக மோசடி

## சுங்கத் திணைக்களம் மக்களுக்கு எச்சரிக்கை



சுங்கத்துறையில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பணத்தை கொள்ளையடிக்கும் கும்பல் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு சுங்கத் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

குறித்த மோசடி தொடர்பில் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின்

06

## தமிழர் அறிவுபூர்வமாக சிந்திக்கும் காலகட்டம் இது

### மட்டு. நகரில் நாமல் ராஜபக்ஷ கருத்து



எதிர்வரும் தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படாதவாறு அவர்கள் அறிவுபூர்வமான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

06

## தேர்தலை இலக்கு வைத்து SLFP வலுவான கூட்டணி

### அமைக்க முழு முயற்சி என்கிறார் அமரவீர



எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு நாட்டின் பாரிய மற்றும் வலுவான கூட்டணி ஒன்றை அமைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னின்று செயற்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தை

06

## மலையக ரயில் சேவைகள் நேற்று முதல் வழமைக்கு

### ரயில்வே திணைக்களம் தெரிவிப்பு



மலையகப் பகுதிக்கான அனைத்து ரயில் சேவைகளும் நேற்றுக் (26) காலை முதல் வழமை போன்று இடம்பெறுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையில் மரங்கள் முறிந்து விழுதல், பாறைகள் புரளுதல் , மண் மேடு சரிதல் போன்ற அபாயம் காணப்பட்ட நிலையில் பொதுமக்களின்

06

## கொழும்பின் சில வீதிகளை தற்காலிகமாக மூட முடிவு

### போக்குவரத்து பொலிஸார் நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**




கடும் காற்று காரணமாக கொழும்பின் சில வீதிகள் நேற்றிரவு முதல் தற்காலிகமாக போக்குவரத்துக்கு

06

# நாட்டைக் கட்டியெழுப்ப பழைமையான பொருளாதார போக்கையும் அரசியல் போக்கையும் மாற்ற வேண்டும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

நாட்டை க் கட்டியெழுப்புவதற்கு பழமை யான பொருளாதாரப் போக்கையு ம் அரசியல் போக்கையும் மாற்றியமைக்க வேண்டும் என ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பழைமையான பொருளாதார மு றையினால் தான் இந்நாட்டில் வே லையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே புதிய பொருளாதார முறைமையை உருவாக்குவதன் ஊடாக புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இரணைமடு, நெலும் பியச மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்ட இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கும் சந்தர்ப்பமும் இதன்போது வழங்கப்பட்டது.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, இப்பிரதேச இளைஞர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இளைஞர்களுக்கு வருமான வழிகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் அவசியம்.

முதலில் யாழ்ப்பாணத்தில் அல்லது தேசிய மட்டத்தில் இப்பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும். கடந்த நான்கு வருடங்களாக எமது நாட்டில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. கொவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டன. இத்தகைய கடினமான நேரத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன்.

இன்று நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் வீழ்ச்சியடைந்த



பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதுதான். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் 2023 2024 திட்டத்தை நான் இப்போது ஆரம்பித்துள்ளேன். நாடு வங்குரோத்து அடைந்துள்ளதை உலகமே ஏற்றுக்கொண்டது. இப்போது நாடு வங்குரோத்து நிலையில் இல்லை என்று இப்பொழுது நாம் கூற வேண்டும்.

நாடு வங்குரோத்தாகும் பட்சத்தில் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் நம்முடன் இணைந்து செயல்படாது. நாட்டு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். தொழில் செய்பவர்களுக்கு போதிய சம்பளம் கிடைப்பதில்லை. வேலையில்லா திண்டாட்டம் ஏன் ஏற்பட்டது? பழைய பொருளாதார முறையினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது.

தாய்லாந்து, வியட்நாம், மலேசியா போன்ற நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தில் முன்னேறி வருகின்றன. பணம் இல்லாததால் கடன் வாங்குகிறோம். இப்போது கடனை திருப்பிச் செலுத்த வழியில்லை. இப்பிரச்சினையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவேன். ஆனால் நாம் அதிக கடன் எடுத்தால் நாடென்ற ரீதியில் மேலும் நெருக்கடி நிலை உருவாகும். அரச தொழில்களை வழங்கவும் பணம் இல்லை. இனி மேலாவது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேர்தல் காலத்தில் தொழில் வழங்குவதாக அரசியல்வாதிகள் வாக்குறுதி அளிக்கின்றனர். இது பணமில்லாத வெறும் பணப்பையுடன் பயணம் செய்வது போன்றது. இந் நிலையை நாம் நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டும். புதிய பொருளாதார அமைப்பை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சியடையும் போது தொழில் வாய்ப்புகள் உருவாகின்றன. நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை, குறைந்தது 50 இலட்சமாக அதிகரிக்க வேண்டும். இந்நாட்டிற்கு வரும் ஒரு சுற்றுலாப் பயணி ஒரு நாளைக்கு 150 டொலர்களை மட்டுமே செலவிடுகிறார். ஆனால் அவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 400500 டொலர்களைப் பெறுவதற்கான பொறிமுறையை நாங்கள் உருவாக்க வேண்டும்.

ஒரு நாடு முன்னேற, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க வேண்டும். அடுத்ததாக, நமது கைத்தொழில் துறையை அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இப்பிரதேசத்தில் முதலீட்டு வலயங்களை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது

கணினி கல்வியையும் மேம்படுத்த வேண்டும். இப்பயணத்தைத் தொடர்வோம். இங்கே சிக்கிக் கொண்டிருந்தால் உலகை வெல்ல முடியாது. நான் இளைஞனாக இருந்த காலத்தில், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொருளாதார ரீதியில் முன்னணியில் இருந்தது. ஆனால் தற்போது சிங்கப்பூர், மலேசியா, சீனா, வியட்நாம் ஆகிய நாடுகள் முன்னேறியுள்ளன. இப்படியே பார்த்துக்கொண்டிருந்தால், ஆப்கானிஸ்தான் நம்மை விட முன்னேறலாம்.

எனவே, பழமையான பொருளாதாரப் போக்கையும், அரசியல் போக்கையும் மாற்ற வேண்டும். தொழில் வாய்ப்புகளை வழங்கி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் திட்டத்தை, என்னால் மறந்து விட முடியாது.

தொழில் கேட்பதை விட யார் ஆட்சிக்கு வந்தாலும் எப்படி தொழில் வழங்குவது என்ற கேள்வியை கேளுங்கள். பொய்க் கூச்சல் போடுபவர்களிடம் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு இருக்காது. உங்களது பிரச்சினைகளை முறையாக தீர்க்கும் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்தில் நம்பிக்கை வைத்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்' எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், இளைஞர் விவகாரம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேதீர, கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றப் பிரதிப் பணிப்பாளர் ஐயாத்துரை தவேந்திரன் மற்றும் இளைஞர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# இளைஞர்களின் தொழில் பிரச்சினையை இவ்வருடத்துக்குள் தீர்த்து வைப்போம்

நவீன விவசாயத்தை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் வேலைத் திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.

ஆசியாவின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக வடமாகாணம் மாற்றப்படும்.

காங்கேசன்துறை மற்றும் மாங்குளத்தில் இரண்டு முதலீட்டு வலயங்கள் அமைக்கப்பட்டு இவ்வருடத்திற்குள் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டு இளைஞர் யுவதிகளின் தொழில் பிரச்சினைத் தீர்க்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

அதேபோன்று மீண்டும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நவீன விவசாயத்தைக் கிராமத்திற்கு கொண்டுச் செல்வதற்கான வேலைத்திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கத்தில் கடந்த 24ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த யாழ். மாவட்ட மாநாட்டிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் உரையாற்றுகையில், 'வட. மகாணத்தில் பயன்படுத்தப்படாத பல காணிகள் காணப்படுகின்றன. யாழில் மாத்திரமின்றி முழு நாட்டிலும் அவ்வாறான பல காணிகள் உள்ளன.



அந்த இடங்கள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் எமது நாட்டில் விவசாய ஏற்றுமதி காணப்பட்டது. அநுராதபுர காலத்தில் இலங்கை நெல் ஏற்றுமதி செய்தது. பின்னர், தேயிலை, கோபி, இறப்பர், கறுவா உள்ளிட்டவைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தற்போது அந்த ஏற்றுமதிச் செயற்பாடுகள் தடைபட்டுள்ளன. அதனால், விவசாயத்தை நவீனமயப்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தை மீண்டும் உருவாக்க வேண்டும்.

இளைஞர் யுவதிகள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். அதனால் இலங்கை டொலர்களை ஈட்டிக் கொள்வதற்கான வாய்ப்பும் அதிகமாக கிடைக்கும். நவீன விவசாயத்தில் 5000 சதுர அடியில் உயர் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு ஹெக்டயாரில் 08 மெட்ரிக்






தொன் நெல் விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியும். அதனால் ஏற்றுமதி மற்றும் வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தையும் கட்டமைக்க முடியும்.

அதேபோல் சுற்றுலா வர்த்தகத்தை பலப்படுத்துவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. அதேபோல் வலுசக்தி குறித்தும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் காற்றின் மூலமான மின்சார உற்பத்தியை செய்வதற்கான சாத்தியங்களும் உள்ளன.

அதனால் ஜிகாவார்ட் அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். குளங்கள் மீது சூரிய சக்தி படலை அமைத்து அதனூடாக மின்சாரம் தயாரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்துகிறோம். இதற்காக பூநகரி மற்றும் இரணைமடு குளங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வடமாகாணமானது அதிகளவில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டிருக்கிறது.

மேலும், இந்தப் பகுதியில் 700 மெகாவார்ட் திறன் கொண்ட ஆசியாவின் மிகப்பெரிய சூரிய சக்திப் படலை நிறுவும் பணியை மேற்கொள்ளவிருக்கிறோம்.

இதனை ஆரம்பமாகக் கொண்டு ஆசியாவின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக வடக்கை மாற்ற முடியும். வலுசக்தி துறையின் முன்னேறிச் செல்ல அதிகளவில் மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

இம்மாநாட்டின் போது யாழ். மாவட்ட இளைஞர் யுவதிகளின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் நேரடியாக எடுத்துரைக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்னவும் கலந்துகொண்டிருந்தார். இதன்போது பிரதேச இளைஞர்களின் திறன் மற்றும் கலாசாரத் திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

# கேப்பாப்பிலவு காணி பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

கேப்பாப்பிலவு கிராமத்தில் காணிப் பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (26) முல்லைத்தீவு மாவட்டத்தில் "உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்ற போது, ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், கல்லூரி முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அறிந்த வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை என்னவென்று வினவ, அதன்போது அவர்களின் பிரச்சினையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டனர்.

அதனையடுத்து, வடமாகாண ஆளுநரால் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். காணிப் பிரச்சினை காரணமாக தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், எனவே இதற்கு உடனடியாக தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் குறித்த பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன், வடமாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப்பிட்டார். போராட்டத்தில் கலந்துகொண்ட தம்மை சந்தித்து, தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு, போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர்.



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 மே 27 திங்கட்கிழமை

தொழுகை நேரம்

10 முதல் 13 வரை

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : காலை : 7.22 - 8.52வரை
சுபநேரம் : காலை : 11.52 - 1.22வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# மேல் மாகாணத்தைப் போன்று வடமாகாண சுகாதார சேவைகள் மேம்படுத்தப்படும்

## மாங்குளம் வைத்தியசாலையில் மனநல அபிவிருத்தி நிலையத்தை திறந்து வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

மேல் மாகாணத்தைப் போன்று வடமாகாண சுகாதார சேவைகள், உயர்தர சுகாதார சேவைகளை கொண்டதாக மேம்படுத்தப்படும்.

மாங்குளம் வைத்தியசாலையில் மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை, மனநல அபிவிருத்தி நிலையத்தை திறந்து வைத்து ஜனாதிபதி தெரிவித்தார்.




2017ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது வடமாகாண சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக தன்னால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இன்று மக்களிடம் கையளிக்க முடிந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நவீன வைத்தியசாலைகளுடன் கூடிய சுகாதார வசதிகளை வடக்கு மாகாணம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, மேல் மாகாணத்தைப் போன்று மேம்பட்ட சுகாதார சேவைகளைக் கொண்ட மாகாணமாக வடக்கின் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்வதே தமது நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வைத்திய

06

# பாதெனிய பகுதி விபத்தில் ஒருவர் பலி 13 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாதெனிய பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ள வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இந்த விபத்து நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளதுடன் பாதெனியவிலிருந்து அனுராதபுரம் நோக்கி சென்ற வேன் ஒன்று அனர்த்தத்துக்குள்ளாகியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாத்திரை சென்ற வேன் ஒன்றே இவ்வாறு அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் சாரதி நித்திரை கொண்டதன் விளைவாகவே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் விபத்து இடம்பெற்றபோது குறித்த வேனில் 15 பேர் பயணம் செய்ததாகவும் அந்த அலுவலகம் தெரிவித்தது.

இந்த விபத்தில் 69 வயதான எம்பிலிபிட்டியைச் சேர்த்த நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 13 பேர் காயங்களுக்குள்ளாகி கல்கமுவ அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

காயங்களுக்கு உள்ளான 13 பேரில் 7 பேர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் அரசாங்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பில் கல்கமுவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்தது.

# மரம் முறிந்து வீழ்ந்து மூன்று பேர் காயம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**



கம்பளை தொலுவ உடலெகுந்தெனிய பிரதேசத்தில் (24) பாரிய வாகை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததினால் இரண்டு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு மூன்று பேர் காயமடைந்த நிலையில் பன்விலதென்னை கிராமிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம் பெற்ற வீடுகளுக்கு அருகில் அமைந்திருந்த மேலும் இரு வீடுகளில் வசித்தோர் பாதுகாப்பு கருதி அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொடந்து பெய்துவரும் காற்றுடன் கூடிய கடும் மழை காரணமாகவே மேற்படி மரம் வீழ்ந்துள்ளது.

# 14 போலி மாணிக்கக் கற்களை 13 1/2 கோடி ரூபாவிற்கு விற்க முயன்ற ஆறு பேர் கைது

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு முன்பாக 14 போலி மாணிக்கக் கற்களை 13 1/2 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்ய முயன்ற பெண் உட்பட ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி பிற்பகல் கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து செயற்பட்ட ஊழல் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

அதன்படி, ஒரு வியூகம் வகுக்கப்பட்டு இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்வதற்காக மாணிக்கக் கற்களைக் கொண்டு வரும் குழுவினருடன் தொடர்பு கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் விஜேசிங்க, வியூகத் தூதுவராகச் செயற்பட்டு அந்தக் குழுவை கட்டுகஸ்தோட்டை பழைய பாலத்துக்குக் அழைத்து வர ஏற்பாடு செய்தார்.

மாணிக்கக் கற்களைக் கொண்டு வந்தவர்களில் ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவதுடன் ஆறு பேர் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ளனர். இதற்கிடையில் லஞ்ச ஒழிப்புப் பிரிவின் ஏனைய அதிகாரிகள் விஜேசிங்கவின் நண்பர்கள் என அவ்விடம் வந்து, அதன் பின் அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடி மாணிக்கக் கற்களை பார்வையிட்டுள்ளனர். இறுதியாக, 13 1/2 கோடி ரூபாவுக்கு மாணிக்கக் கற்களை விற்க இந்தக் குழு விருப்பம் தெரிவித்துள்ளது. அதனையடுத்து, குறித்த நபர்களின் தகவல்களை விசாரித்த பொலிஸார் அவர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் ஹெய்யன்துடுவ, ஹினிதும, காலி, புறக்கோட்டை , வெலிக்கடை போன்ற பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், ஹெய்யன்கதுடுவையில் வசிப்பவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது . அவர் ஒரு சுதேச மருத்துவர் என்று கூறியதுடன் தனக்கு புதையலொன்றை தோண்டியதன் மூலம் இந்த மாணிக்க கற்கள் கிடைத்ததாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 3945 வயதுக்கு இடைப்பட்டவர்கள். கைது செய்யப்பட்ட குழுவினரிடம் இருந்த 14 இரத்தினக் கற்களுக்கு மேலதிகமாக மூன்று மோட்டார் சைக்கிள்கள், டிஜிட்டல் தராசு, பயணப் பை மற்றும் சிறிய மின்விளக்கு என்பற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகநபர்கள் வைத்திருந்த மாணிக்கக் கற்களை போலியானவை என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பதினான்கு மாணிக்கக் கற்களில் இரண்டிற்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சந்தேகநபர்களிடம் இருந்தது. குறித்த சந்தேக நபர்களில் கணவன், மனைவி தம்பதி

06

# கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் முறிந்து விழும் அபாய நிலையில் 200 மரங்கள்

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் விசேட ஆய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம் , ஆரியரத்ன கனேகொட**

நாட்டில் நிலவும் கடும் மழையுடன் கூடிய சீரற்ற வானிலை காரணமாக கொழும்பு பிரதேசத்தில் பெரும்பாலான மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் 50 வருடங்கள் முதல் 150 வருடங்கள் வரை பழமையான மேலும் 200 மரங்கள் முறிந்து விழக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது .

இதுவரை சரிந்து வீழ்ந்துள்ள பெரும்பாலான மரங்கள் ஆபத்தான நிலையில் இருக்கவில்லை என்றும் 50 முதல் 150 வருடங்கள் பழமையான சுமார் 200 மரங்கள் ஆபத்தான நிலையில் தற்போது காணப்படுகின்றமை நடத்தப்பட்ட ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது

அவற்றில் பல மரங்கள் மண் அரிப்பு காரணமாக விழும் அபாயத்தில் உள்ளதாகவும் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட மரங்களில் 100க்கும் மேற்பட்ட மரங்கள் அகற்றப்பட்டு ஏனைய மரங்களின் கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தற்போது நிலவும் பலத்த காற்று காரணமாக கொழும்பு மாநகரப் பகுதிக்குள் 50 மரங்கள் இதுவரை சரிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ள கொழும்பு மாநகர சபை எவ்வாறாயினும், வீழ்ந்துள்ள மரங்கள் எதுவும் முன்னர் இனங்காணப்பட்ட அபாயகரமான நிலையில் இருந்த மரங்கள் அல்ல என்றும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது. அது குறித்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதன்படி, அந்த நிறுவனத்தின் குழுவொன்று அது தொடர்பாக ஆய்வு ஒன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.



படம் ஆரியரத்ன கனேகொட

# களனி, களுகங்கைகளில் வெள்ளப்பெருக்கு அபாயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

களனி கங்கை மற்றும் களுகங்கையை அண்மித்த பகுதிகளில் கடும் மழை பெய்தால் அதனை அண்டிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர இதனைத் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், களுகங்கை மற்றும் களனி கங்கைளின் மேற் பகுதிகளில் தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் அது தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்தால் அந்த கங்கைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


# போலி ஆவணங்களை தயாரித்து மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் இந்தியாவில் கைது

போலி ஆவணங்களை தயாரித்து மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

45 வயதான உமேஷ் பாலா ரவீந்திரன் என்பவர் இந்திய மத்திய குற்ற விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ற இந்த இலங்கையர், 2014ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் அரசாங்க ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

இவர் கடந்த 2016ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மீண்டும் இந்தியாவுக்கு குடிபெயர்ந்து, கர்நாடகாவில் உள்ள வீடமைப்புத் தொகுதியில் தங்கியிருந்த போது இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள், கைத்தொலைபேசிகள் மற்றும் கைத்துப்பாக்கி ரக துப்பாக்கியும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் இலங்கையர் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது மனைவி மூன்று குழந்தைகளுடன் இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்றதாகவும், அவர்கள் விமான நிலையத்தில் இருந்த போது, பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 14ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 19

## குறள் தரும் சிந்தனை



வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று

விருந்தினரை நாள்தோறும் வரவேற்று மகிழ்பவரின் வாழ்க்கை, அதன் காரணமாகத் துன்ப முற்றுக் கெட்டொழிவதில்லை.

# சீரற்ற காலநிலை தொடர்வதால் மக்களுக்கு கடும் எச்சரிக்கை!

நாடு கடந்த சில தினங்களாக மழை மற்றும் கடும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலைக்கு முகம்கொடுத்துள்ளது. இக்காலநிலைக்கு வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கமும், தென்மேல் பருவ பெயர்ச்சி மழைக்காலநிலையும் காரணம் ஆகும்.

இக்காலநிலையின் விளைவாக நீர்த்தேக்கங்கங்களதும் குளங்களதும் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. தாழ்நிலப் பிரதேசங்களில் அவ்வப்போது வெள்ளநிலையும் ஏற்படுகின்றது.

இந்நிலையில் புத்தளம் தப்போவ, குருநாகல் தெதுரு ஓயா, களுத்துறை, குக்குலே கங்கை, அநுராதபுரம் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் மேலதிக நீர் வான்கதவுகள் திறக்கப்பட்டு வெளியேற்றப்படுகின்றது. களுகங்கை, களனி கங்கை, அத்தனகலு ஓயா, ஜின் கங்கை, நிலவளா கங்கை என்பவற்றின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது.

தற்போதைய கடும் காற்றுடன் கூடிய காலநிலையினால் கடந்த சில தினங்களுக்குள் 07 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 06 பேர் மரக்கிளைகள் முறிந்து விழுந்ததால் மரணத்திற்கு உள்ளாகியுள்ளனர். காலி, இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில்தான் இம்மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் நான்கு மரணங்கள் புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள போதிலும், மூன்று மரணங்கள் மரக்கிளைகள் முறிந்து விழுந்ததால் ஏற்பட்டவை என்று அனர்த்த முகாமத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இச்சீரற்ற காலநிலையினால் 15 பேர் காயமடைந்துள்ளனர். 10 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டும் 2645 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தும் உள்ளன.

இந்த சீரற்ற காலநிலையினால் 11 ஆயிரத்து 300 மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 188 பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறி நான்கு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அதேநேரம், 111 குடும்பங்களைச் சேர்ந்த 431 பேர் நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் தங்கியுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக புத்தளத்திற்கான ரயில் பாதையில் பாலாவி முதல் முந்தல் வரையான பகுதி நீரில் மூழ்கியுள்ளது. அதனால் அப்பகுதி ஊடாக ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சீரற்ற காலநிலையின் பாதிப்புகளுக்கும் தாக்கங்களுக்கும் நாட்டின் 19 மாவட்டங்கள் முகம்கொடுத்துள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனுக்குடன் அவசர நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்தபடி சூராவளியாக உருவாகியுள்ளதோடு, அதற்கு ரீமெல் எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த சூராவளி இன்று அதிகாலை பங்களாதேசத்திற்கு அருகில் வங்காள விரிகுடாவின் மேற்கு கரையோரத்தின் ஊடாக தரையைக் கடக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்திருக்கிறது. இதன் ஊடாக இலங்கைக்கு நேரடிப் பாதிப்புக்களும் தாக்கங்களும் இல்லாவிட்டாலும் அடிக்கடி கடும் காற்று வீசக்கூடிய சூழ்நிலை காணப்படுவதோடு கடும் மழையும் பெய்ய முடியும்.

அதேவேளை நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்படும். மணித்தியாலயத்திற்கு 60 தொடக்கம் 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீச முடியும். அதனால் தற்போதைய சூழலில் கடறொழிலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. அத்தோடு அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு கடும் காற்றுடன் அடிக்கடி மழை பெய்யும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதன் காரணத்தினால் உயரமான மரங்களுக்கு கீழ் ஒதுங்கி நிற்பதையும் வாகனங்களை நிறுத்தி வைப்பதையும் தவிர்க்குமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கங்கைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர் வெளியேற்றப்படும் பிரதேசங்களின் தாழ்நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருப்பது மிகவும் அவசியமானது. அத்தோடு மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் மழை பெய்து வருவதால் மண்சரிவு அச்சுறுத்தலும் நிலவிக் கொண்டிருக்கின்றது. அது தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் முன்னெச்சரிக்கையும் விடுத்திருக்கிறது.

ஆகவே சீரற்ற காலநிலையின் தாக்கங்கள் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பெரும்பான்மை கிடைக்காவிடின் பா.ஜ.கவின் அடுத்த திட்டம் என்ன?

இம்முறை இந்திய லோக்சபா தேர்தலில் தனிப்பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் பா.ஜ.கவின் திட்டம் எப்படி இருக்கும் என்ற விவாதம் எழுந்துள்ளது. இதற்காக தேர்தல் ஆலோசகர் ஒருவரின் உதவியை நாடுவதற்குக் கூட பா.ஜ.க தயாராக உள்ளதாக அரசியல் களத்தில் செய்திகள் உலவுகின்றன.

பாரதிய ஜனதா கட்சி 2024 லோக்சபா தேர்தலில் 370 இடங்களை வெல்வதை இலட்சியமாகக் கொண்டுள்ளது. 2019 தேர்தலை விட 67 இடங்கள் அதிகம் வெல்வோம் என்று பா.ஜ.க தலைவர்கள் மேடைக்கு மேடை அறிவித்து வருகின்றனர். ஆனால் பா.ஜ.கவினால் இந்த இலக்கை அடைய முடியுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

பா.ஜ.க தனியாக 370 இடங்களை வெல்வதன் மூலம் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு (NDA) 400 இடங்கள் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதால் பா.ஜ.க இந்த மாபெரும் இலக்கை நிர்ணயம் செய்துள்ளது.

மக்களவையில் 543 ஆசனங்கள் உள்ளன. பா.ஜ.க 2014 மற்றும் 2019 இல் முறையே 282 மற்றும் 303 இடங்களை வென்றது. ஆனால் கடந்த முறை வென்றதில் இருந்து கூடுதலாக 67 இடங்களை சேர்ப்பது என்பது பா.ஜ.கவிற்கு மிகவும் கடினமான பணியாக இருக்கலாம்.

பா.ஜ.க மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று சில அரசியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொண்டாலும், 370 இடங்கள் என்பது அக்கட்சிக்கு மிகவும் கடினமான ஒன்றாகும். 2019 இல் பா.ஜ.க வெற்றி பெற்ற மாநிலங்களில் எல்லாம் அதே மாதிரி வெற்றியை மீண்டும் பா.ஜ.க பதிவு செய்ய வேண்டும். கடந்த முறை குறைவான வாக்கு வித்தியாசத்தில் வென்ற இடங்களிலும் வெற்றியை உறுதி செய்ய வேண்டும். அத்தோடு இல்லாமல் புதிதாக 67 இடங்களை வெல்ல வேண்டும்.



கடந்த முறை வென்ற இடங்களில் சில தொகுதிகளை இழக்கும் பட்சத்தில் கூடுதலாக புதிய இடங்களில் வெல்ல வேண்டும். அதே சமயம் பா.ஜ.கவிற்கு பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பு இல்லை என்று இன்னும் சில கருத்துக் கணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இன்னும் சிலர் என்.டி.ஏ கூட்டணிக்கே கூட பெரும்பான்மை கிடைக்க வாய்ப்பு இல்லை என்றும் கூறுகின்றனர்.

தற்போது லோக்சபா தேர்தலில் பா.ஜ.க 443 மக்களவைத் தொகுதிகளிலும், அதன் கூட்டணிக் கட்சிகள் 100 இடங்களிலும் போட்டியிடுகின்றன. இதுவரை வெளியான கருத்துக் கணிப்புகளில் பா.ஜ.கவிற்கே பெரும்பான்மை கிடைக்கும் என்று கூறப்பட்டாலும் 3 கட்ட தேர்தலுக்குப் பின்னர் பா.ஜ.க பெரிய அளவில் பின்னடைவை சந்தித்து உள்ளதாகவே கணிப்புகள் கூறுகின்றன.

2024 லோக்சபா தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் பா.ஜ.கவின் திட்டம் எப்படி இருக்கும் என்ற விவாதம் எழுந்துள்ளது.

இதற்காக தேர்தல் ஆலோசகர் ஒருவரின் உதவியை நாடுவதற்கும் பா.ஜ.க தயாராக உள்ளதாம். பிரஷாந்த் கிஷோர் மூலம் தி.மு.கவை நாடுவதற்குக் கூட பா.ஜ.க ஆயத்தமாக உள்ளதாக செய்திகள் வருகின்றன.

அதன்படி பா.ஜ.க கூட்டணியில் இல்லாத பிஜு ஜனதா தளம், அ.தி.மு.க போன்ற கட்சிகளின் உதவிகளை பா.ஜ.க நாடும் வாய்ப்புகள் உள்ளன. அ.தி.மு.கவிற்கு தமிழ்நாட்டில் பெரிய அளவில் எம்.பிக்கள் இல்லையென்றால், தி.மு.கவின் உதவியை கூட பா.ஜ.க நாடலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


# மனிதரின் ஆயுளை 1.8 ஆண்டுகளால் குறைத்துள்ள கொரோனா தொற்று!

கொரோனா தொற்றுப் பரவல், மனிதர்களின் ஆயுளை 1.8 ஆண்டு அளவுக்கு குறைத்துள்ளது என்று உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவலால் உலகெங்கும், 1.3 கோடிக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். கடந்த 2020 இல் உலகளவில் ஏற்பட்ட மரணங்களுக்கான காரணங்களில் முதலிடத்திலும், 2021 இல் இரண்டாவது இடத்திலும் கொரோனா இருந்தது. கடந்த, 2019 முதல் 2021 காலகட்டத்தில் மனிதர்களின் உலகளாவிய சராசரி ஆயுள் 1.8 ஆண்டுகள் குறைந்து, 71.4 ஆண்டாக இருந்தது. அதே நேரத்தில் ஆரோக்கியமான வாழ்நாள் 1.5 ஆண்டுகள் குறைந்து 61.9 ஆண்டாக இருந்தது.

அமெரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு சராசரி ஆயுள், 3 ஆண்டு வரை குறைந்துள்ளது என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில், உடல் பருமன் தொடர்பாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2022 ஆம் ஆண்டில் 5 வயதுக்கு மேற்பட்டோரில் 100 கோடி பேர் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் 50 கோடி பேர் மிகக் குறைந்த எடையுடன் உள்ளனர்.

உலகெங்கும், 5 வயதுக்குட்பட்ட 14.8 கோடி பேர் போதிய ஊட்டச்சத்து கிடைக்காமல் பாதிக்கப்பட்டனர். அதேநேரத்தில், 4.5 கோடி குழந்தைகள்



போதிய வளர்ச்சி இல்லாமல் உள்ளன. 3.7 கோடி குழந்தைகள் உடல் பருமனாக உள்ளன.

# சம்மாந்துறை வலய ஆசிரிய ஆலோசகர் மன்சூருக்கு மணிமகுட விழா

சம்மாந்துறை வலய தமிழ்ப்பாட ஆசிரியர்கள் இணைந்து 36 வருட காலம் கல்விச் சேவையாற்றி ஓய்வு பெற்ற தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் இசட். எம்.மன்சூருக்கு மணிமகுடம் சூட்டும் விழாவை நடத்தினர்.

சம்மாந்துறை வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். றசீன் தலைமையில் சம்மாந்துறை பழப் பூங்கா( புரூட்பார்க்) மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது. பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம். ஜாபீர், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன் மற்றும் சம்மாந்துறை வலய கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். நிகழ்வுக்கு முன்னதாக மறைந்த வலயக்கல்விப் பணிப்பாளர் மர்ஹூம் டொக்டர் உமர் மௌலானாவிற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி பிரார்த்தனை இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரியஆலோசகர் மன்சூர் தொடர்பாக பலரும் பாராட்டி உரையாற்றினர். நிகழ்வை தொகுத்தளித்த ஏ.பீ.எம்.அஜ்வத் கவிதை வாழ்த்துமடல் வாசித்தார். மன்சூரின் அர்ப்பணிப்பான சேவையைப்பாராட்டி கல்விப் பணிப்பாளர் ஜாபீர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான சகாதேவராஜா, றசீன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

11 வருட காலம் ஆசிரியர் பணியையும் 25 வருட காலம் ஆசிரியர் ஆலோசகர் பணியையும் நிறைவு செய்து 2024.05.17 அன்று ஓய்வு பெற்ற மன்சூர் நல்லதொரு கவிஞராவார்.

ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஏற்புரை நிகழ்த்துகையில், தான் 36 வருடங்களுக்கு மேல் கல்விச் சேவையாற்றியதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருடனும் முரண்படவில்லை என்றும் மாறாக அனைவரும் தனக்கு ஒத்துழைப்பு நல்கியதாகவும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் இணைந்து இவ்வாறான விழாவை எடுத்தது நெகிழ்ச்சியாக இருக்கிறது என்று நன்றி கூறினார்.

நிகழ்வை நெறிப்படுத்திய தமிழ்ப் பாட ஆசிரியர் எம் ரி.றிபாயிஸ் நன்றியுரையாற்றினார்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)





# அல்பஸர் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் கண்சத்திரசிகிச்சை முகாம்

புனர்வாழ்வு மற்றும் மனிதநேய உதவிகளுக்கான மன்னர் ஸல்மான் நிலையத்தின், உபகுழுக்களில் ஒன்றான அல்பஸர் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த இலவச கண்புரை நீக்கல் சத்திரசிகிச்சை முகாமினை வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு கடந்த 2024.05.08 காத்தான்குடி தள வைத்தியசாலையில் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் ஹாலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நஸீர் அஹ்மத் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.

வருடாந்தம் இலங்கையில் நடத்தப்படும் இம்முகாம், கடந்த வருடம் காலி வெரஸ்முல்ல பிரதேசத்திலும், காத்தான்குடி தள வைத்தியசாலையிலும் 1500 நோயாளிகளுக்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்முறையும் வழக்கம்போல இலங்கையின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள சகல இன மக்களையும் மையப்படுத்தி காத்தான்குடி தள வைத்தியசாலையில் சுமார் ஆயிரம் நோயாளர்களுக்கு கண் சத்திரசிகிச்சை முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சவூதிஅரேபிய மன்னரின் புனர்வாழ்வு மற்றும் மனிதநேயப் பணிகளுக்கான தொண்டு நிறுவனத்தின் ஓர் உபபிரிவான அல் பஸர் விழிப்புலன் மையத்தின் ஏற்பாட்டில் இதுபோன்ற சிகிச்சை முகாம்கள் உலகெங்கிலும் இடம்பெற்று வருகின்றன.







மேற்படி நிலையத்தினால் உலகில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நடத்தப்படும் இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் இலங்கையில் இதுவரை 22 தடவைகள் நடத்தப்பட்டதாகவும் 27,000 இற்கும் அதிகமான நோயாளர்கள் பயனடைந்துள்ளதாகவும் இம்மருத்துவ முகாமின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முஜாஹித் சுபைர்...

# பெருஞ்சிறப்பு கொண்ட பன்னிரு திருமுறைகள்



திருமுறைகளுக்குப் பெருஞ்சிறப்பு உண்டு. சைவர்கள் இவற்றை இறைவன் நூல் என்றும், தமிழ் வேதம் என்றும் கருதிப் போற்றி வருகின்றனர். வேதம் மற்றும் சைவ ஆகமங்களின் சாரமாகவே திருமுறைகள் அமைந்துள்ளன. இவை சிவனின் அடையாளங்கள், ஆற்றல்கள், அருள் செயல்கள் முதலியவற்றை விளக்கி நிற்கின்றன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) இவற்றின் இயல்புகள் திருமுறைகளுள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சில பதிகங்கள் அற்புத நிகழ்வுகளோடு இணைந்தவை. (பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது) அவற்றைப் பக்தியோடு ஓதினால் உரிய நன்மையை அவை தரும் என்ற நம்பிக்கை சைவர்களிடையே நிலவி வருகிறது. தமிழ்நாட்டின் 500 ஆண்டுக்காலச் சமயசமூக வரலாற்றை அறியத் திருமுறைகள் துணையாகின்றன. தமிழ், இசை, கலை, பெண்மை ஆகியவை உயர்ச்சி பெறத் திருமுறைகள் பெரும் பங்கு ஆற்றியுள்ளன.



கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# மட்டக்களப்பு பெரிய கல்லாறு அருள்மிகு ஸ்ரீ கடல்நாச்சி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசி திருச்சடங்கு உற்சவம்

வரலாற்றுப் புகழ்மிக்க மட்டக்களப்பு பெரியகல்லாறு அருள்மிகு ஸ்ரீ கடல்நாச்சி அம்பாள் ஆலய உற்சவம், இன்று 27.05.2024 ஆம் திகதி திட்கட்கிழமை திருக்கதவு திறந்தலுடன் ஆரம்பமாகி நாளை 28.05.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வங்கக் கடலில் கும்பம் சொரிதலுடன் திருச்சடங்கு நிறைவு பெறவிருக்கின்றன.

05.06.2023 காலை உதயத்தில் அம்பாளின் திருக்கதவு திறத்தலுடன் காலை 8.00 மணிக்கு சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பவனி இடம்பெறுவதுடன் மு.ப 10.00 மணிக்கு வட்டுக் குத்தல் நிகழ்வு இடம்பெறும். பி.ப 12.30 மணிக்கு விசேட அலங்கார பூசையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறுவதோடு பி.ப 2.30 மணிக்கு சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் இருந்து கடல்நாச்சித் தாயாரின் முகக்களை தாங்கிய பேழை மிகக் கோலகாலமாக எடுத்து வரப்படும்.

அதனைத் தொடர்ந்து மடைகள் நிகழ்வு இடம்பெறும். மாலை 7.00 மணிக்கு முதல் பாளை விற்பனை நிகழ்வு இடம்பெறும். பெரியகல்லாறு மத்திய விளையாட்டுக்கழகம் முன்னின்று நடத்துவர்.

நள்ளிரவு 12.00 மணிக்கு அம்பாளின் அதியுன்னத நிகழ்வான பூரணகும்பம் நிறுத்தும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து அங்கப்பிரதட்சனை செய்தல், ஆராத்தி எடுத்தல், பிள்ளை விற்று வாங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

28.05.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00மணிக்கு சம்பூரண பூசையைத் தொடர்ந்து காலை 6.00 மணிக்கு கடலில் கும்பம் சொரிதல் நிகழ்வு இடம்பெறும்.

ஆலயவரலாறு – மட்டக்களப்பின் தெற்கே முப்பத்திரண்டு(32) கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது பெரியகல்லாறு ஆகும்.

கடலும் கடல்சார்ந்து நெய்தல் நிலமாக மண்வாசனை மறாமல் இன்றும் மக்கள் பொலிவுடன் வாழ்கின்றார்கள். கல்வி வளமும் வற்றாமல் பல சமூகங்கள் இணைந்து வாழும் இக்கிராமத்தில் கடலாச்சியம்மன் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார்.

கடலும் கடல் சார்ந்துள்ள இடத்தில் இந்தியாவில் காவேரிப்பூம்பட்டினம் அமைந்துள்ளது.

அங்கு வாழ்ந்த மக்கள் பன்நாட்டு வணிகம் செய்த வரலாற்றை பழந்தமிழ் இலக்கியங்கள் அடையாளம் காட்டுகின்றன. அங்கு தொன்மையான தொல்குடி மக்கள் என்று குறிப்பிடுகின்ற பரதவர்கள் வாழ்ந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது.

இந்த பரதவர்களின் பண்பாட்டை கே.ஈ.டீ.குரூஸ் எழுதிய 'ஆழ்சூழ்உலகு' என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இவர்களின் குலதெய்வங்கள் குமரியம்மன் முத்தாரம்மன் சந்தான மாரியம்மன் கடலம்மன் என்று குறிப்பிடுகின்ற தெய்வங்களாகும்.

க.தமிழ்செல்வியின் நூலில் ஆறு கட்டுத்துறை என்னும் நூலில் கடலைத் தெய்வமாக வழிபடும் முறையும் காட்டப்பட்டுள்ளது. சாதி, மத, இன, பேதமின்றி கடற்கரையில் வாழ்கின்ற மக்கள் கடலம்மாள் என்று கையேந்தி வழிபட்டதை இந்நூல் வெளிக்காட்டுகின்றது.

பரதவர் குலத்து வம்சத்தில் தோன்றிய மீகாமன் ஒரு சிற்றரசன் இவர் கடல்வீரன் கண்ணகியின் கால்சிலம்புக்கு நாகமணி பெறுவதற்கு கடல் கடந்து சென்று பெற்றுக்கொடுத்த மாவீரன் இவ்வம்ச குலத்தவர்கள் கடற்தொழில் செய்பவர்கள் கடலம்மனைக் குலதெய்வமாகக் கொண்டார்கள் இவர்களில் சிலர் வழமைபோல் கடற்தொழிலுக்குப் படகு மூலம் கடலுக்குச் சென்றுள்ளார்கள் என்றும் அந்த நேரம் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதாகவும் படகு கடலில் அள்ளுண்டு கரைசேர முடியாமல் தத்தளித்து துன்பப்பட்டார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.



அவ்வேளை படகில் இருந்தவர்கள் குலதெய்வமான கடலம்மனைக் கையேந்தி கடலம்மாளே எங்களை காப்பாற்று என்று வணங்கினார்கள் அந்த நேரம் கடலம்மை ஒளி வடிவத்துடன் காட்சி கொடுத்து கிழக்குக் கரையை நோக்கி படகை இழுத்து வந்து மட்டக்களப்பு கல்லாற்றுக்கரையை அடைந்ததாகவும் ஒரு கர்ண பரம்பரைக் கதையொன்று எடுத்து இயம்பு கின்றது

நா. நவநாயகமூர்த்தி தொல்லியல் ஆய்வியலாளர் தனது ஆய்வு நூலில் தமிழகத்திலிருந்து இலங்கையில் மட்டக்களப்பு கல்லாறு கடலம்மன் ஆலயம் முதல் முதலாக தோன்றியதனால் மற்றைய இடங்களுக்கும் பரவியிருப்பதாக இலக்கியப்பாடல் மூலம் வெளிப்படுகின்றது.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன்
ஓய்வு நிலை அதிபர்
களுவாஞ்சிகுடி







புசல்லாவை மெல்போட் தோட்ட அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது கும்ப ஊர்வலம் மற்றும் கலாஷாபிஷேகம் இடம்பெறுவதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.




## கண்ணபுரம் கும்பாபிஷேகம்

கிழக்கிலங்கை, மட்டுமாநகர், 35ஆம் கிராமம், கண்ணபுரம், அருள்மிகு ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய பிரதிஷ்ட பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.06.09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2024.06.07ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 2024.06.07ஆம் திக தி சனிக்கிழமை எண்ணெய் காப்பு சார்த்தும் நிகழ்வு இடம்பெறும்.

## அறநெறி அறிவுநொடி



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20051) இந்து சமயத்துக்கு அடிப்படையானவை என்ன?**
வேதங்கள்

**20052) வேதங்கள் எத்தனை வகைப்படும்?**
நான்கு

**20053) நான்கு வகை வேதங்களும் எவை?**
ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் ஆகியவை தான் அடிப்படையில் வேதங்களாகக் கருதப்பட்டன.

**20054) அதர்வணத்தை என்ன என்று கருதினார்கள்?**
தீமை

**20055) பிற்காலத்தில் நான்காவது வேதமாகச் சேர்க்கப்பட்டது எது?**
அதர்வணம்

**20056) வேதங்களை தமிழில் என்னயவென்று கூறுவார்கள்?**
நான்மறை என்றும் கூறப்படும்.

**20057) என்றாலும் தமிழில் நான்மறை என்பன வேறானவை என்போரும் உள்ளனர். அவர்கள் நான்மறை என்பது எவற்றை?**
அறம், பொருள், இன்பம், வீடு என்பர்

**20058) வேதங்கள் நான்கு என வகுத்தவர் யார்?**
வியாசர்.

**20059) வேதங்களை "வேறு என்னவென்று கூறுவர்?**
சுருதி, மறை"

**20060) வேதங்களுக்கு எத்தனை பாகங்கள் உண்டு?**
நான்கு

**20061) வேதங்களின் பாகங்கள் எவை?**
சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதங்கள்

**20062) சம்ஹிதை என்பது என்ன?**
"மந்திரங்கள்"

**20063) பிராமணம் எனப்படுவது என்ன?** உரை அல்லது சடங்கு வழிமுறைகள்

**20064) ஆரண்யகத்தில் என்ன உள்ளது?** காட்டில் வாழும் முனிவர்களின் உரைகள்

**20065) வேதங்களுக்கான தத்துவ உரைகள், விளக்கங்கள், எதிர்ப்புக்கள் இவற்றை என்னவென்று கூறுவார்கள்?**
உபநிடதங்கள்

**20066) வேதத்தின் முடிவில் வருவன எவை?**
வேத அந்தம் (முடிவு) என்னும் பொருளில் வேதாந்தம் எனப்படும்.

**20067) பல்வேறு கடவுள்களைப் புகழ்ந்து பாடல்கள் புனையப்பட்டிருப்பது எதில்?**
வேதங்களில்

**20068) சடங்குகளின் போது பின்பற்றப்படுவதற்காக பல்வேறு விவரங்கள் எந்த வேதத்தில்?**
யஜுர் வேதத்தில்

**20069) சடங்குகளின் போது இசைப்பதற்காகவே இயற்றப்பட்டது எது?** சாம வேதம்

**20070) இந்திய இசை எதில் தோன்றியதாக கூறப்படுகின்றது?**
சாம வேதத்திலிருந்தே

**20071) அதர்வண வேதம் எதைப் பற்றி குறிப்பன?**
சடங்குகளைப் பற்றியே

**20072) இவற்றுள் காலத்தால் முற்பட்டது என்ன வேதம்?**
ரிக் வேதம்.

**20073) இது எங்கு தோன்றியது?**
இந்தியாவில்

**20074) இது எப்போது உருவாகியிருக்கக்கூடுமெனக் கருதப்படுகின்றது?**
கி.மு. 1500விற்கு முன்

# திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் தீர்த்த உற்சவம்







(மன்னார் குறூப் நிருபர் )

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தீர்த்த உற்சவம் புதன்கிழமை (22) சிறப்பாக இடம் பெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழா கடந்த 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழா இடம் பெற்று வருகின்றது. தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்றதை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள் வீதி ,வெளி வீதி உலா வந்தனர். அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் பாலாவி தீர்த்தக்கரைக்கு சென்றதை தொடர்ந்து தீர்த்த உற்சவம் இடம் பெற்றது.

புதன்கிழமை (22) காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம் பெற்றது. இதன் போது ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் தீர்த்த உற்சவத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழில் முன்னர் நிலவிய கல்வி...

நடைபெற்ற யாழ். மாவட்ட ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வடமாகாணத்தின் யாழ் மாவட்டத்தில் 375 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அடையாள ரீதியில் சிலருக்கு நியமனங்களை வழங்கி வைத்தார்.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

இன்று ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள நீங்கள் அனைவரும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ளீர்கள். இன்று 3540 மாணவர்கள் கற்கும் வகுப்பறையில் மாணவர்களின் எதிர்காலத்தை நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள். அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் உங்களது வழிகாட்டுதலின்படி உருவாக்கப்படுகிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியாவிட்டால், நீங்கள் ஆசிரியர் தொழிலுக்கு உகந்தவர் அல்ல.

முன்பு யாழ் ஆசிரியர்களின் சேவை நாடளாவிய ரீதியிலும் சர்வதேச அளவிலும் மிக கௌரவத்துடன் பார்க்கப்பட்டது. அந்தப் பொறுப்பை அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் நிறைவேற்றினார்கள். நான் படித்த கொழும்பு றோயல் கல்லூரியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இருந்தனர். அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியதோடு, அவர்களின் விசேடமான அர்ப்பணிப்பின் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் பிரபல ஆசிரியர்கள் குறித்து இன்றும் சமூகத்தில் பேசப்படுகிறது. அந்த ஆசிரியர் பாரம்பரியம், நாட்டின் ஆசிரியர்களுக்கு ஆசிரியப் சேவை குறித்து சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது என்றே கூற வேண்டும்.

கல்வி உயர் மட்டத்தில் பேணப்பட்டதால் தான் யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகள் உலகம் முழுவதும் பெரும் புகழைப் பெற்றிருந்தன. ஹார்ட்லி கல்லூரி மாணவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். எனவே, நீங்களும் அந்த கௌரவமான தொழிலில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பணியில் நீங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். வீதியில் கோஷம் போட்டால் மாணவர்கள் உங்களை ஏற்க மாட்டார்கள். எனவே, உங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அப்போது சிறந்த பாடசாலை முறைமையொன்று இருந்தது. நமது முன்னாள் சபாநாயகர்களில் ஒருவரான கே.பி. ரத்நாயக்க ஹார்ட்லி கல்லூரியில் கல்வி கற்றார். யுத்தம் காரணமாக ஆசிரியர்கள் பாடசாலையை விட்டு வெளியேறியதோடு அப்பாடசாலையும் வீழ்ச்சியடைந்தது. யாழ்ப்பாணத்தின் கல்வி முறை மீண்டும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பபினர்கள், பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி யாழ்ப்பாணத்தில் பாடசாலை முறைமையை முன்னைய சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டங்களை அரசாங்கத்திற்கு வழங்குமாறு ஆளுநருக்கு அறிவிக்க விரும்புகின்றேன். தமிழ், சிங்கள மொழிக் கல்வியை மாத்திரம் மாணவர்களுக்கு வழங்குவது போதுமானதல்ல என்பதோடு ஆங்கில அறிவும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். இது 1015 வருட நீண்டகால வேலைத்திட்டம் என்றாலும் அதற்கான செயற்பாடுகளை இப்போதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஆசிரியர் தொழிலின் கௌரவத்தைப் பாதுகாத்து வட பகுதி பிள்ளைகளுக்காகச் சிறந்த சேவையை ஆற்றுவதற்கு தம்மை அர்ப்பணிக்குமாறு கேட்டுக்கொண்டு இன்று நியமிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## ISIS உடன் தொடர்புடைய...

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் இருக்கின்றார்களா என கண்டறிவதற்கான நடவடிக்கைகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளதுடன் அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அண்மையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளான இலங்கையைச் சேர்ந்த நான்கு நபர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய அவர்களுடன் தொடர்பிலிருந்த சந்தேகத்திற்கிடமான நபர் ஒருவரைக் கண்டறியும் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர்கள் தெரிவித்தனர்.

அதற்கு வசதியாக சந்தேக நபரின் பல புகைப்படங்களை பொலிஸார் நேற்று முன்தினம் ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். 46 வயதான ஜெராட் புஷ்பராஜா ஒஸ்மான் ஜெராட் என அடையாளங் காணப்பட்டுள்ள மேற்படி சந்தேகநபர் தெமட்டகொடை பிரதேசத்தில் வசிப்பவர் எனவும் சுமார் 05 அடி 06 அங்குலம் உயரமுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பிலான தகவல்களை வழங்க குற்றப் புலனாய்வு திணைக்களப் பணிப்பாளர் 071 8591753 அல்லது பொறுப்பதிகாரிக்கு 0718591774 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார், பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். அது தொடர்பில் சரியான தகவல்களை வழங்குவோருக்கு 20 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் எனவும் தகவல் வழங்குபவரின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் உறுதியளித்துள்ளது. இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இலங்கையர் ஒரு கூலித் தொழிலாளி (நாட்டாமை) எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அண்மையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கை ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நான்கு பேருக்கும் பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததால், அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

## அபிவிருத்திக்கு ஒதுக்கிய...

இருந்த நாட்டை இந்த வருடத்தில் பொருளாதார ரீதியில் மேம்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு அம்சமாக மேற்படி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வது அவசியம் என நிதியமைச்சின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் தமக்கு கீழ் பணி புரியும் அதிகாரிகளை முறையாக முகாமைத்துவம் செய்து மேற்படி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் அலட்சியம் செய்யும் அரச அதிகாரிகளை அந்த பதவியிலிருந்து நீக்குவதற்கும் அதற்கு பதிலாக சிறந்த அதிகாரிகளை அந்த பதவிகளில் அமர்த்துவதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பிரதேச செயலாளர்களின் சம்பள அதிகரிப்பு அவர்களின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களை முறையாக முன்னெடுப்பது மற்றும் கடமைக்கு சமூகளிக்கின்றமையை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

அந்த வகையில் பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் அவ்வாறான அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பை ஐந்து வருடங்களுக்கு நிறுத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மக்களின் பணத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டு தமது கடமைகளை முறையாக நிறைவேற்றத் தவறுவது கடுமையான குற்றமாகும் என்றும் நிதியமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சொத்துக்கள் தொடர்பான வர்த்தமானி...

வர்த்தமானி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அது புதிய சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக அமையாது என்றும் வருமான வரி சட்டத்தின் 123 (8) சரத்திற்கு இணங்க வருமான வரி திணைக்களம் மூன்றாவது தரப்பினரின் தகவல்களை பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமையை செயற்படுத்துவது மாத்திரமே இதன் மூலம் இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தை பாதிக்கும் வகையில் இதன் செயல்பாடுகள் அமையாது என தெரிவித்துள்ள அவர், செயற்படாதுள்ள சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துதலே இந்த சுற்றுநிருபம் மூலம் இடம்பெறும் என்றும் அதற்கிணங்க கடந்த மார்ச் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் மே மாதம் 21 ஆம் திகதி தேசிய வருமான வரி ஆணையாளரால் தகவல் வெளியிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழமையான வருமானம் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிறுவனங்களான காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், நிறுவனங்கள் பதிவாளர் திணைக்களம், பங்குச்சந்தை, வங்கி மற்றும் வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் அன்றாடம் இடம் பெறும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்களை தேசிய வருமான வரி திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சி.வி.விக்னேஸ்வரனின் நலம்...

இல்லத்திற்கு நேற்று முன்தினமிரவு சென்ற ஜனாதிபதி, அவரது நலம் தொடர்பில் விசாரித்ததோடு அவருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

அத்தோடு அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்றும் பிரார்த்தித்தார்.

## தமிழர் அறிவுபூர்வமாக...

மட்டக்களப்பில் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் இதனைக் குறிப்பிட்டார். பொதுஜன பெரமுன உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் சந்திரகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பில் நாமல் ராஜபக்ஸ மேலும் தெரிவிக்கையில்;

அனைத்து ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகிறது. இம்முறை அவ்வாறு நடக்காமல் அறிவு பூர்வமான தீர்மானத்தை தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகள் தமக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவர்களுக்காக பணியாற்ற தாம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்ததுடன் தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெறாத மஹிந்த ராஜபக்சதான் தமிழர்களுக்காக தொடர்ந்தும் பணியாற்றியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தோட்டத் தொழிலாளரின் சம்பள;...

படாவிட்டால் அரச தோட்டங்களை நிருவகிக்கும் அனைத்து கம்பெனிகளுக்கும் சொந்தமான தோட்டங்களை அரசாங்கம் மீளப்பெற தீர்மானித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். எல்பிட்டியவில் நேற்று (26) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மகாநாட்டில் இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், முதலாளிகள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் பலமுறை சம்பள விடயம் தொடர்பில் பல சுற்று பேச்சுவார்த்தை நடத்தியும் தோட்ட முதலாளிகள் சம்மதிக்காததால் , தொழிலாளர் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி தொழில் சட்டத்திற்கு அமைவாக 1,350 ரூபா அடிப்படை சம்பளமாகவும் விசேட கொடுப்பனவாக ரூபா 350 வுடன் 1700 ரூபாவை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டது. இதுதொடர்பில் 15 நாட்கள் கால அவகாசம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அளிக்கப்பட்டது. ஆனால் எந்த தரப்பினரிடமிருந்தும் முறையான மாற்று முன்மொழிவு எதுவும் முன்வைக்கப்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.அவர்களுடன் ஜனாதிபதியும் பல தடவைகள் கலந்துரையாடினார் என்று தெரிவித்த அமைச்சர் ,

கடந்த கொரோனா வைரஸ் தொற்று காலப்பகுதியில் நாடு வீழ்ச்சியடைந்த போது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். அத்தோடு வீழ்ச்சி கண்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இவர்கள் தங்கள் உழைப்பின் மூலம் பெரும் பங்களிப்பு செய்தனர். இதனால்தான் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் எதிர்காலத்தில் குறைந்தபட்ச அடிப்படை சம்பளத்தை வழங்க வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைகளுக்கு தோட்ட முதலாளிகள் உரிய முறையில் பதிலளிக்கவில்லை. இன்று தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் கூட இந்த அடிப்படை ஊதியத்தை விட தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க தோட்டங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டாலும், அந்த தோட்டங்களில் இருந்து பல நன்மைகளை அவர்கள் பெற்றுக் கொண்டாலும், அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. சட்ட விதிகளுக்கு அமைவாக ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்திற்கு அமைவாக சம்பளம் வழங்காத வினைத்திறனற்ற தோட்டங்கள் மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு முறையாக சம்பளம் வழங்கக்கூடியவர்களிடம் தோட்டங்கள் கையளிக்கப்படும் என இத்தோட்டங்களின் முதலாளிகளுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## தாமரைக் கோபுரத்தில்...

காட்சியில் அது நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. கொள்ளுப்பிட்டி வாலுகாராம மகா விகாரை உள்ளிட்ட ஐந்து விகாராதிபதிகள் மகா விஹார வம்சிக ஷ்யாமோபாலி மஹாநிகாயாவின் ஸ்ரீ கல்யாணி தர்ம மகா சங்க சபையின் உபாத்யாயவும் இரத்மலானை விகாரையின் கொழும்பு மற்றும் ஊவா மாகாண பிரதம சங்கநாயக்கர் மஹரகம நந்த நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர் தர்ம போதனையை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க, தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் தலைவர் யோகா பெரேரா, கொழும்பு மாநகர ஆணையாளர் திருமதி பத்ராணி ஜயவர்தன உள்ளிட்டோரும் அதிதிகளாக கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதிக்கு இடையூறு...

தேர்தல் தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

நாடு பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் முழுமையாக விடுபடவில்லை. நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை முக்கியமாகும். எனவே தான் நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள். ஆட்சியாளர்கள் எவரையும் குறை கூறாமலேயே ஜனாதிபதியாக அவர் அப்போது நாட்டைப் பொறுப்பேற்றார்.அவர் நாட்டைப் பொறுப்பேற்றதன் பின்னர் இந்த நாடு நெருக்கடி நிலையிலிருந்து கட்டம் கட்டமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்தவொரு நாடும் வெகுசுலபமாக பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்ததில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் நாட்டை வீழ்ச்சிப் பாதையிலிருந்து மீட்டெடுத்திருக்க முடியாது.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாமற்போவது மாத்திரமன்றி அரசியல் ஸ்திரத்தன்மையும் இல்லாது போகும். ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என்பதை அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும் என்றும் வஜிர அபேவர்தன எம்.பி மேலும் தெரிவித்தார்.

## சுங்கத் திணைக்களம்...

பேச்சாளர் சிவலி அருக்கொட தெரிவித்துள்ளார். அரச துறைக்கு போட்டிப் பரீட்சை எழுதுபவர்களை இலக்காகக் கொண்டு இந் மோசடி செயற்படுத்தப்படுத்தப் படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், சுங்கத் திணைக்களத்தில் இணைவதற்கு அவ்வாறானதொரு முறைமை இல்லை எனவும் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களே வேலைவாய்ப்புக்கு அமர்த்தப் படுவார்கள் எனவும் சிவலி அருக்கொட மேலும்தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலுள்ள பிரான்ஸ்...

தொடர்பான பிரேத பரிசோதனையின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவராக கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டவரென்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பின் சில வீதிகளை...

மூடப்பட்டுள்ளன. அதற்கிணங்க கொழும்பு 7 மலலசேகர மாவத்தை சந்தியிலிருந்து தும்முல்லை சந்தி வரையிலான வீதி, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை சந்தியிலிருந்து றொட்டுண்டா கார்டன் வீதி மற்றும் கொழும்பு 2 ப்ரே ப்ரூக் பிரதேச வீதிகளும் வாகன போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளன என போக்குவரத்து பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சீரற்ற காலநிலையால்...

புத்தளம் மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 3455 குடும்பங்களை சேர்ந்த 11,815 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய 7 மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் 74 பாதுகாப்பான இடங்களில் தொடர்ந்தும் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும் வேலைத் திட்டங்களும் இடம்பெறுகிறது.

## மலையக ரயில் சேவைகள்...

பாதுகாப்பை கருத்திற் கொண்டு நேற்று முன்தினமிரவு மற்றும் இரண்டாவது நாளாக நேற்று இரவும் ரயில் சேவைகளை இரத்துச் செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

தற்போது கோட்டையிலிருந்து பதுளைக்கும் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் ,கண்டிக்குமான அனைத்து வழமையான ரயில் சேவைகள் வழமை போன்று இடம்பெறுவதாக ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

### (27.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** உயர் பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சில சூட்சுமங்களை மேலதிகாரிகளை கற்றுக் கொடுப்பார்கள்.

**ரிஷபம் :** கடன் சுமையின் காரணமாக ஒரு சிலர் வாங்கிய இடத்தை விற்க நேரிடும். அண்ணன் தம்பிக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும்.

**மிதுனம்:** வாடகை கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் முயற்சி கைக் கூடும்.

**கடகம்:** புதிய தொழில் தொடங்குவது பற்றி தீட்டிய திட்டங்கள் நிறைவேறும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

**5)சிம்மம்:** எதை எந்த நேரம் நீங்கள் செய்ய நினைத்தாலும் அதை அந்த நேரம் செய்து முடிப்பீர்கள். எடுக்கும் முயற்சிகள் எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்கும்.

**6)கன்னி:** அவ்வளவு நல்லதல்ல. மனக்கவலை பணக் கவலை இரண்டும் தொடரும். சில இழப்புகளை சந்திக்க நேரிடும்.

**7)துலாம்:** இடம் பூமி வாங்குவதில் இருந்த இடையூறுகள் அகலும் என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கி போட்டு இடத்தை இப்பொழுது அதிக விலைக்கு விற்பனை செய்வீர்கள்.

**8)விருச்சிகம்:** சொத்துக்களால் ஆதாயம் உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாக முடியும். அதிகார அந்தஸ்தில் உள்ளவர்களின் ஆதரவோடு பல நல்ல காரியங்கள் முடிவடையும்.

**9)தனுசு:** என்னவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவை அனைத்தும் இப்பொழுது கிடைக்கும். பூர்விக சொத்து தகராறுகள் அகலும். பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**10)மகரம்:** இடம் வாங்குவது வீடு வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். லாவாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**11)கும்பம்:** சகோதரர் ஒற்றுமை பலப்படும். இடம் பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வியாபாரத்தில் உள்ள நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**12)மீனம்:** அற்புதமான நேரம் ஆகும். பொருளாதாரம் உச்சநிலையை அடையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

## மேல் மாகாணத்தைப்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை நேற்று (26) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் 4,500 மில்லியன் ரூபா செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் என்பதோடு மனநல மறுவாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நெதர்லாந்துத் தூதுவர் பொனி ஹோபேக் அவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

## 14 போலி மாணிக்கக்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

யரும் இருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். இரத்தினக்கற்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை இரத்தினக்கல் மற்றும் நகை அதிகார சபைக்கு அனுப்பி அறிக்கையைப் பெற பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்

## 'ரீமால்' அதி தீவிர...

திணைக்களம் அதற்கான சிவப்பு எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

நேற்றைய தினம் வளிமண்டலவியல் திணைக்களம் இந்த சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளதுடன் அடுத்து வரும் 24 மணித்தியாலத்திற்கு அந்த எச்சரிக்கை அமுலில் இருக்கும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் வங்காள விரிகுடா கடற்பரப்பிலும் பலத்த காற்றுடன் கடும் மழை பெய்யும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளதுடன் மேற்படி கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் அந்த சிவப்பு எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதை வேளை கடும் மழை மற்றும் பலத்த காற்று தொடர்பிலும் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதற்கிணங்க நேற்றுக்காலை 10:30 மணி முதல் இன்று காலை 10:30 மணி வரை நடைமுறையில் இருக்கும் வகையில் அந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க மத்திய மலையக பகுதிகளில் மண் சரிவுகள் ஏற்படக்கூடிய அபாயங்கள் தொடர்பிலும் வட மத்திய, தெற்கு, வடமேல் மாகாணங்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்திற்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் கடும் மழை பெய்யும் என்றும் 50 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என்று அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

## டெங்குநோய் பரவல்...

ரீதியில் டெங்கு நோய் பரவும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனைக் கவனத்திற் கொண்டு நேற்று முதல் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அந்தப் பிரிவு, டெங்கு பரவல் அதிகம் காணப்படும் பிரதேசங்களில் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இதுவரை நாட்டில் 24 ஆயிரத்து 323 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை,டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்திலேயே சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதற்கிணங்க நேற்று முதல் ஜுன் முதலாம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரம் அறிவிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன் ஒரு அம்சமாக கல்வியமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை தெளிவுபடுத்தும் விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்குமாறும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தேர்தலை இலக்கு வைத்து...

பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத சில கட்சிகளும் ஏற்கனவே தமது கூட்டணிக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# நகர்வலம்





அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 1500 கிலோமீற்றர் வீதி புனரமைக்கும் திட்டத்தின், கீழ் முதலாவதாக பொல்கஸ்ஓவிட்ட வெனிவெலகொல பாடசாலை வீதி, காபட் வீதியாக செப்பனிடப்பட்டு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில், பொதுமக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. இந்த வீதி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்ட பின்னர் அப்பகுதியிலுள்ள விகாரைகளின் சங்கைக்குரிய தேரர்கள், முதலில் இந்தப் புதிய வீதியூடாக யாத்திரை சென்றனர். அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தேரர்களுக்கு தானம் வழங்கினார்.

## சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் மஜ்லிஸ்



(பேருவளை விசேட நிருபர்)

ஷாதுலி நாயகம் அல் குத் புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ்ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 133ஆவது வருட மனாகிப் தமாம் கந்தூரி மஜ்லிஸ் (25/5/2024) இரவு கலீபதுல் குலபா மௌலவி அல் உஸ்தாத் எம்.இஸட். முஹம்மத் ஸுஹுர் (பாரி) தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சீனன்கோட்டை பகுதிக்கான சாதுலிய்யாத் தரீக்காவின் புதிய கலீபாவாக அத்தரிக்காவின் உலக ஆன்மீகத் தலைவர் செய்கு ஸஜ்ஜாதா அஷ் செய்ஹ் மஹ்தி அப்துல்லாஹ் அல்பாஸி அல் மக்கி அஷ் மக்கி அஷ்ஷாதுலி அவர்களினால் நியமிக்கப்பட்ட அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளருமான அஷ் செய்ஹ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி)க்கான நியமனக் கடிதம் இதன் போது கையளிக்கப்பட்டது.

பள்ளிச்சங்கமும் ஜாமியத்துல் பாஸியதுஷ்ஷாதுலியா கலாபீடமும் இணைந்து அன்னாருக்கு இணை நினைவுச் சின்னமொன்றையும் வழங்கியது.

புதிதாக கலீபாக்களாக நியமிக்கப்பட்ட மௌலவி முஹம்மத் பாரூக் (மக்கி) பேருவளை, மௌலவி எம்.ஜே.எம்.பஸ்லான் (அஷ்ரபி) பேருவளைமருதானை, மௌலவி முஹம்மத் ரஸுக் (பஹ்ஜி) காலி ஆகியோரும் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டனர். சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட உறுப்பினர்கள், பலஸ்தீன முன்னாள் தூதுவர் எம். பௌஸான் அன்வர், மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் அதாவுல்லாஹ் அபூபக்கர், கலீபாக்கலான மௌலவி எம்.எம்.ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி), எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி), எம்.பிஷ்ர் அஜ்வாத் (பஹ்ஜி) மற்றும் ரயீஸுல் முஹம்மத் மௌலவி எம். இக்ராம் (பாஸி) ஜாமியத்துலீ பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட முதல்வர் மௌலவி எம்.அஸ்மிகான் (முஅய்யிதி) உட்பட கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள் பெருமளவிலான இஹ்வான்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

பலஸ்தீன காஸா மக்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.





இ.தொ.காவின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் 4ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருகோணமலை புனித ஜோசப் முதியோர் இல்லத்தில், இ.தொ.கா தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

## பிரபாலினியின் இன்னிசை மழையும் CD வெளியீடும்




இலங்கையின் முதல் தமிழ் பெண் இசையமைப்பாளர் Queen Cobra பிரபாலினி பிரபாகரன் வழங்கும் இன்னிசை மழை இசை நிகழ்ச்சி, இசைத்தட்டு வெளியீடு மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பு என்பன இனறு திங்கள் (27) மாலை 3.30 முதல் கொழும்பு வெள்ளவத்தை சபையர் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. ஈழத்து மெல்லிசை மன்னர் எம். பி பரமேஸின் 'உனக்கு தெரியுமா' பாடலுடன் 50 பாடல்கள் அடங்கிய 50 வருட இசைத்தென்றல் தொடர் அடங்கிய இசைத்தட்டே வெளியிடப் படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான த.மு.கூ தலைவர் மனோ கணேசன், ம.ம.மு தலைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளும் இந்நிகழ்விற்கு மும்மொழி எழுத்தாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமை தாங்குகிறார்.

தினகரன் தினசரி மற்றும் தினகரன் வாரமஞ்சரி வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் முன்னிலை வகிப்பதோடு புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் முதல் இசைத்தட்டை பெறுவதோடு, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் தில்லை எஸ் நடராஜா, ஐ.ம.ச உதவி செயலாளர் உமா சந்திரபிரகாஷ், ஐ.தே.க மாவட்ட அமைப்பாளர் சு. ஆனந்தகுமார், மூத்த பாடகர்களான எஸ் முத்தமுகு, எஸ் கலாவதி உள்ளிட்டோர் சிறப்பு இசைத்தட்டுக்களை பெறுகிறார்கள்.

ஊடகங்கள் சார்பாக வீரகேசரி தினசரி மற்றும் ஞாயிறு வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், சக்தி தொலைக்காட்சியின் பணிப்பாளர் எம். குலேந்திரன், சூரியன் வானொலியின் பணிப்பாளர் எஸ். நவனீதன், கெப்பிட்டல் வானொலி மற்றும் தொலைக் காட்சியின் பொது முகாமையாளர் எம்.எப்.சியா உல்ஹசன், சிரேஷ் ஒளிபரப்பாளர் யூ.எல்.யாக்கூப், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மூத்த அறிவிப்பாளர் நாகபூஷணி கருப்பையா, டான் தொலைக்காட்சி பணிப்பாளர் நிரோஷன் இராமானுஜம், டான் நிகழ்ச்சி நிறைவேற்று தயாரிப்பாளர் எம்.கவிதா உள்ளிட்ட கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

## அஸ்பெக் சலஞ்சேர்ஸ் கிண்ணம் 2024 அஸ்பெக் செல்சீ அணி வசமானது



அஸ்பெக் அகடமியின் உதைபந்தாட்ட வீரர்களுக்கிடையிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுபோட்டியில் அஸ்பெக் செல்சீ அணியினர் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தனர். கடந்த 23 மற்றும் 24ம் திகதிகளில் மாஞ்சோலை அல் ஹிரா பாடசாலை மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

இதில் அஸ்பெக் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த வீரர்கள் 4 அணிகளாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கிடையே லீக் முறையில் போட்டிகள் நடைபெற்றன. இந்த தொடரில் முதலிரண்டு இடங்களை பெற்ற அஸ்பெக் செல்சீ மற்றும் அஸ்பெக் சலஞ்சர்ஸ் அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தன. இதில் அஸ்பெக் செல்சீ அணியினர் 2:1 எனும் கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.

அஸ்பெக் அகடமியின் பணிப்பாளர் ALM. இர்பான் வழிகாட்டலில் அஸ்பெக் விளையாட்டுக்கழக தலைவர் KL.ஷாஜஹான் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கி நடத்தினார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செயிட் அலி சாஹிர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.





கொழும்பு செட்டியார் தெரு. 172 ஆம் கடைத்தொகுதி இளைஞர்கள் இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்த மாபெரும் வெசாக் அன்னதானம் வெள்ளிக்கிழமை மாலை சுகுமார், செல்வம், மற்றும் நிஷாந்தன் சந்திரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.05.25
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5484
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,106,492.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 8 7 7 9 4 5

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 059
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 7 9 4 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3726
சீட்டிழுப்பு திகதி 2024.05.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,663,128.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 03 16 23 50
விசேட எழுத்து D
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67310

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1832
2024.05.25
97171
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 433,700,846.00
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 25 32 39 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 310
ஆங்கில எழுத்து A
L7 எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 1 2 8 0 4 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 30,311,134.80

ராசி சுப பலன்
திகதி 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 793
செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,108,382.20
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 01 06 26 52
தனயோக இலக்கம் 63132
நாளுக்கான விதி எண் 10

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1514
2024.05.25
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 93,840,764.24
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 07 12 57 62
விசேட எழுத்து R
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 73768

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2024

மேற்படி பரீட்சை 2024 செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவங்கள் 2024.05.27 ஆம் திகதியிலிருந்து 2024.06.14 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அரசாங்கப் பாடசாலையொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்ற பாடசாலையொன்றில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் மாத்திரமே தோற்ற முடியும்.

2025 ஜனவரி 31 ஆம் திகதியன்று 11 வயதுக்குக் குறைந்த, குறைந்த வருமானம் உடைய மாணவர்களுக்கு மாத்திரமே உதவிப்பணம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) முறைமையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள், பிரமாணங்கள் ஆகியவற்றை https://onlineexams.gov.lk/eic ஊடாக பிரவேசித்து பெற்றுக் கொள்ள முடியும்.

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்காக விண்ணப்பிக்க வேண்டிய விதம் தொடர்பான அறிவுறுத்தல்கள் அறிவுறுத்தற் பத்திரத்தில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விசாரணை :-**

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | : 011-2784208, 011-2784537, 0112786616<br>011-2786200, 011-2784201 |
| மின்னஞ்சல் முகவரி | : gr5schexam@gmail.com |
| நேரடி தொலைபேசி இலக்கம் | : 1911 |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| தபால் முகவரி | : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை,<br>பத்தரமுல்ல. |

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

**6/5/புலமைப்பரிசில;/2024**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2024.05.22**

கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

# வடக்கு எம்.பிக்களின் கருத்தறியும் கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**





வடமாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசினால் கொண்டுவரப் படவுள்ள மீன்பிடி சட்டதிருத்த வரைபு சம்பந்தமாக வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களி'ன் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டறியும் கலந்துரையாடல் யாழில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் (25) நடைபெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.இதன் போது 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது. வடமாகாணத்தின் நான்கு மாவட்ட மீனவ பிரதிநிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்தனர். தொடர்ச்சியாக தமது பிரச்சினைகளை தமது சார்பில் பாராளுமன்றில் பேச வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது. இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், MA.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், அங்கஜன் இராமநாதன் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

## வடக்கின் உதயம்

யாழ்.போதனா வைத்தியசாலை

# பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்ட மூன்று பேர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவரை பார்வையாளர் நேரம் அல்லாத நேரத்தில் மூவரும் பார்வையிட செல்ல முற்பட்ட வேளை, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதற்கு அனுமதி வழங்க மறுத்தனர்.அதனால் மூவரும் உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு, வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டுள்ளனர்.

அதுதொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால், யாழ்ப்பாண பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் முரண்பட்ட மூவரையும் கைது செய்துள்ளனர் கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# மாங்குளம் வைத்தியசாலையின் திருத்தப்பட்ட பெயர்ப் பலகை

**மாங்குளம் குரூப் , முல்லைத்தீவு நிருபர்கள்**




மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் பெயர்ப் பலகை திருத்தப்பட்டுள்ளது.

நேற்று 26ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வைத்தியசாலையை திறந்து வைத்தார். முன்னதாக இவ்வைத்தியசாலையின் பெயர் தமிழில் தவறாக எழுதப்பட்டுள்ளதாகவும் அதனை மாற்றுமாறும் பல தடவைகள் முறைப்பாடு செயயப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் உடனடியாக குறித்த பெயர்ப் பலகையில் உள்ள தமிழ் எழுத்துப்பிழை திருத்தப்பட்டு புதிய பெயர்ப் பலகை அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த பெயர்ப் பலகையின் எழுத்துப்பிழை திருத்தப்பட்டு, நேற்றைய திறப்பு விழாவிற்க்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மட்ட சுகாதார மேம்பாடு: மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு இன்றியமையாதது

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



பாடசாலைச் சமூகத்தில் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களை வளர்ப்பதன் ஊடாக மாணவர்களின் வினைத்திறனான கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கு அடித்தளமிட முடியும் என பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால;ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பூநகரி மத்திய கல்லூரியில், பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற அதிபர்களுக்கான ஒன்றுகூடலில் கலந்து கொண்டு, சுகாதார மேம்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சுகாதார மேம்பாட்டுக் கூறுகளுடையதாக பாடசாலைச் சூழலை அமைத்து சுகாதார மேம்பாட்டுப் பாடசாலையாக ஒவ்வொரு பாடசாலையையும் மாற்றியமைக்கும் செயற்பாட்டை பாடசாலைச் சமூகம் முன்னெடுக்க வேண்டும்.

சுகாதார மேம்பாட்டுப் பாடசாலைகள் மாணவர்களுக்கு ஆரோக்கியத்தையும், கல்விக்கான அடித்தளத்தையும் ஆளுமைப் பண்புகளையும் வளர்க்க உதவுகின்றன.

பாடசாலை சுகாதார மேம்பாட்டுக் குழுவினூடாக பல்வேறு வளவாளர்களின் உள்ளீடுகளை கிடைக்கச் செய்வதோடு பாடசாலைச் சுகாதாரக் கழகங்களூடாக மாணவர்களது செயற்பாட்டுடனான ஆளுமை, தலைமைத்துவப் பண்புகள் மற்றும் பல்வேறுபட்ட திறன்களும் கட்டியெழுப்பப்படுகின்றன. இதனூடாக வளரிளம் பருவ சுக நலம், இனப்பெருக்க சுகாதாரம், சுற்றுச் சூழற் சுகாதாரம் பற்றிய அறிவும் அனுபவங்களும் பிள்ளைகளுக்குக் கிடைக்கின்றன என்றும் அவர் கூறினார்.

பாடசாலைச் சுகாதார மேம்பாட்டில் தரமான பாடசாலை மருத்துவப் பரிசோதனை, தடுப்பு மருந்தேற்றல், பிள்ளை சுகாதார விருத்திப் பதிவேட்டை பயன்படுத்தல், சுகநலக் கல்வி வழங்கல் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

## மலைச்சாரல்

# பாகிஸ்தான் பௌத்த அருங்காட்சியகம் தலதா மாளிகையில் திறந்து வைப்பு

**மாவத்தகம நிருபர்**



கண்டி தலதா மாளிகையின் பௌத்த நூதனசாலையினுள்ளே அமைந்துள்ள பாகிஸ்தான் பௌத்த அருங்காட்சியகம் முழுமையாக புனர் நிர்மாணம் செய்யப்பட்டு மக்களின் பார்வைக்காக இன்று மீளவும் திறந்து வைக்கப்பட்டது. பிரதம அதிதியான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பாஹிம் உல் அஸீஸ் அதனை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் கவுன்சிலர் அப்சல் மரைக்கார் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# 330 சமாதான நீதவான்களுக்கு ஒரே மேடையில் நியமனக் கடிதங்கள்







மலையக பெருந்தோட்ட வரலாற்றில் சுமார் 330 பேருக்கு சமாதான நீதவான்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கொட்டகலையில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் தலைமையில் அவரின் முழுமையான முயற்சியின் பயனாக நடைபெற்றது. நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட நீதி, சிறைசாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சர் சட்டத்தரணி, கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ நியமன கடிதங்களை வழங்கி வைப்பதையும் அவருக்கான நினைவுச் சின்னம் வழங்கபபடுவதையும், நியமனம் கடிதம் பெற்றுக் கொண்டவர்களையும் படங்களில் காணலாம். **(நுவரெலியா தினகரன் நிருபர்)**

# யதார்த்த அரசியல் நடத்துபவர் ஜனாதிபதி

இரத்தினபுரி மாவட்ட ஐ.தே.க அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்



மந்திர வார்த்தைகளைக்கூறி மாயாஜால அரசியல் நடத்தாமல், உண்மையைக்கூறி யதார்த்தமான அரசியலையே ஜனாதிபதி நடத்திவருகின்றார். அவரின் பயணப் பாதையை மாற்ற முற்படுவது நாட்டுக்கே ஆபத்தாக அமையும். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து ரணிலுக்கு பேராதரவு வழங்க வேண்டும்." – என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வுப் பொறிமுறையை ஜனாதிபதி நிச்சயம் உருவாக்குவார் எனவும் அவர் கூறினார். கட்சி செயற்பாட்டாளர்கள் சிலருடன் நடைபெற்ற சந்திப்பின் போதே சுப்பையா ஆனந்தகுமார் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துக் கூறுகையில்

"மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரத்து 1700 ரூபா வழங்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி தொழில் ஆணையாளரால் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சம்பள உயர்வை வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் என்ற தொனியில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கருத்து வெளியிட்டுள்ளார். இதனை நாம் வரவேற்கின்றோம். அவருக்கு எமது முழு ஆதரவையும் இது விடயத்தில் வழங்குவோம் என்றார்.

# கந்தப்பளை ஹைபொரஸ்ட்டில் அடிக்கடி முறிந்து விழும் மரங்கள்!

162 பேர் இடம்பெயர்வு





**நானுஓயா நிருபர்**

நாட்டில் இடம்பெற்றுவரும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை ஹைபொரஸ்ட் மஹாவலி குடியிருப்பில் 58 குடும்பங்களை சேர்ந்த 162 பேர் கடந்த (23) வியாழக்கிழமை முதல் இடம் பெயந்துள்ளனர்.

குறித்த குடியிருப்புக்கு அருகில் ஆபத்தான மரங்கள் சரிந்து விழும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பாதுகாப்புக் கருதி அக்குடியிருப்பிலிருந்த 11 குடும்பங்களை சேர்ந்த 45 பேர் வெளியேற்றப்பட்டு தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் போதிய இடவசதி இன்மையால் ஏனைய 47 குடும்பங்களை சேர்ந்த 117 பேர் உறவினர் மற்றும் அயலவர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் அண்மையில் இப்பகுதியில் மூன்று வீடுகளில் மரங்கள் முறிந்து விழுந்து ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடும் மழை மற்றும் கடும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலை காரணமாக எங்களது வீடுகளுக்கு அருகில் உள்ள மரங்களும் அதன் கிளைகளும் அருகில் உள்ள வீடுகளுக்கும், உயிருக்கும், உடைமைகளும் பாதிப்பினை விளைவிக்கும் நிலையில் உள்ளன. இதனால் இரவு நேரத்தில் நித்திரை கொள்ளாமல் அப் பகுதியில் வசிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து வீட்டுக்கு வெளியே நிற்கின்றோம். என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

1987ஆம் ஆண்டு அப்பகுதியில் குடியேற்றப்பட்ட காலத்திலிருந்து பலத்த காற்றினால் பெரிய மரங்கள் வீடுகள் மீது விழும் அபாயம் உள்ளதாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித பயனும் இல்லை எனவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# கிழக்கின் குரல்



# பலஸ்தீன படுகொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்!

## மாபெரும் பலஸ்தீன விடுதலை மாநாட்டில் தீர்மானம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

பலஸ்தீனத்தில் இடம் பெறும் இனப்படுகொலை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என காத்தான்குடியில் நடைபெற்ற மாபெரும் பலஸ்தீன விடுதலை மாநாட்டில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காத்தான்குடியில் மாபெரும் பலஸ்தீன விடுதலை மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை இரவு காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது

200 நாட்களையும் தாண்டிய கொடூர மனிதப் படுகொலைகளைக் கண்டித்தும் பலஸ்தீனத்துக்கு விடுதலை வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்த மாநாடு இடம் பெற்றது.



இதில் சிறப்பு பேச்சாளராக இலங்கையில் தொடர்ச்சியாக பலஸ்தீனுக்காக குரல் கொடுத்துவரும் பேச்சாளர் ரஸ்மின் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உட்பட இன்னும் சிலரும் உரையாற்றினர்.

இந்த மாநாட்டின் தீர்மானங்கள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானாவிடம் கையளிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹீர் மௌலானா இதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்க திருக்கோவில் ஆதார வைத்தியசாலை கிளையின் உத்தியோகபூர்வ மேலங்கி அறிமுக நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை சங்கக் கிளையின் தலைவி திருமதி வி.லோகிதா தலைமையில் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவவைகள் சங்க கிழக்கு மாகாண கிளைச்சங்க தலைவர் எஸ்.ஏ.உமீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உத்தியோகபூர்வ மேலங்கியினை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையில் கடமை புரியும் தாதிய பரிபாலகி திருமதி மேகலாதீபன், சங்கத்தின் அம்பாறை மாவட்ட பிரதம ஏற்பாட்டாளர்களான எஸ்.எம். இத்ரீஸ், எம்.ஏ.எம்.ஜெலீல், எம்.வி. நசீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உத்தியோகபூர்வமாக மேலங்கி அறிமுகம் செய்வதற்கு முன்னர் கேக் வெட்டி அங்கத்தவர்களுக்கு வழங்கி வைத்த பின்னர் மேலங்கி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஏழுஅடி சிவன் சிலையுடன் கூடிய மேற்தளத்துக்கான அடிக்கல்

**காரைதீவு குறூப் நிருபர்**

ஏழு அடி உயர சிவன் சிலையுடன் கூடிய மேற்தளத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் சிவன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

சுமார் 20 லட்சம் ரூபாய் செலவிலான இம் மேற்தள நிருமாணப்பணியை அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த விவேகானந்தம் கமலாதேவி தம்பதியினர் உபயமாக வழங்கியுள்ளனர்.

சிவனாலய பூசகர் கே.கணேசன் அதற்கான கிரியைகளை மேற்கொண்டிருந்தார்.



உபயகாரர் சார்பில் கமலா தேவி விவேகானந்தம் , மகள் அகந்தினி, மகன்மார் சஜீவன், திரிசாந், மருமகன் இரஞ்சிதராசா ஆசிரியர், சகோதரி கலாராணி உள்ளிட்ட பலர் அடிக்கல் நாட்டினார்கள்.

ஆலயம் சார்பில் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, பொருளாளர் கே.கணேசன், கணக்காய்வாளர் ஏ.சுந்தரராஜன், உபதலைவர் த.சண்முகநாதன், உறுப்பினர்களான பி.சசிகுமார் ரி.சிவகாந்தன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தூர்ந்து கிடந்த மடத்தடி மாட்டுப்பளையிலுள்ள மிகவும் பழைமை வாய்ந்த சிவன் ஆலயத்தில் ஏலவே அழகிய சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டைசெய்துவைக்கப்பட்டிருந்தது. அச் சிவலிங்கத்திற்கு மேற்தளம் அமைக்கவே இவ் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

# ஐ.தே.க. செயற்பாட்டு அலுவலகங்கள் திறப்பு

**பாசிக்குடா நிருபர்**

ஐக்கிய தேசிய கட்சியின் வட்டாரச் செயற்பாட்டு அலுவலகங்கள் கல்குடாத் தொகுதியின் ஓட்டமாவடி3, மீராவோடை கிழக்கு ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்டன.

நாடளாவிய ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டுக் காரியாலயங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. அந்தவகையிலேயே இந்த வட்டாரக் செயற்பாட்டு அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன. இவ்விரு அலுவலக திறப்புவிழாக்களிலும் கல்குடா ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் கலாநிதி முசாமில் அதிதியாக கலந்து கொண்டார்.

இவ்வட்டார செயற்பாட்டு அலுவலகங்கள் ஊடாக மக்கள் தங்களது



பிரச்சினைகள் மற்றும் தேவைகளை ஐக்கிய தேசிய கட்சியின் உயர் பீடம் மற்றும் ஜனாதிபதியின் கவனத்திற்கு தெரியப்படுத்தி நிறைவேற்றிக் கொள்ளலாம் என கல்குடா ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர் கலாநிதி முசாமில் இதன் போது தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மதகுருமார் உட்பட ஓட்டமாவடி பிரதேச ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்களும் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

# உலக சாதனை படைக்கவுள்ள திருமலை ஸாஹிரா மாணவன்

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் 32km தூரம் கொண்ட பாக்கு நீரிணையை நீந்தி கடந்து சாதனை புரியவுள்ளார். திருமலை ஸாஹிரா மாணவன்



"கடல் வாழ் உயிரினங்கள், முருகைக் கற்பாரைகளை பாதுகாத்தல், கடலில் பிளாஸ்டிக், பொலித்தீன் சேர்வதை தடுத்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை வளமாக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்தல்" எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் 32km தூரம் கொண்ட பாக்கு நீரிணையை நீந்தி கடந்து சாதனை புரியவுள்ளார்.

திருகோணமலை ஸாஹிரா கல்லூரில் தரம் 10 கல்வி கற்கும் 15 வயது மாணவனான ஸலாமா கடந்த 18 ஆம் திகதி பயிற்சி அடிப்படையில் நீந்திச் சென்றுள்ளார்.

இவருக்கான நீச்சல் பயிற்சிகளை விமானப்படை கோப்பிரல் றொசான் அபேசுந்தர வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# சாய்ந்தமருது பிரதேசத்தில் கடலரிப்புக்கு தீர்வு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்கு கரையோரம் பேணும் திணைக்களத்தின் கண்காணிப்பில் கடலோரங்களில் பாரிய பாறாங்கற்கள் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



தற்போது கடலரிப்பு ஓரளவு தடுக்கப்பட்டு தமது தொழிலை மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாக ஆழ்கடல் மற்றும் கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

அண்மையில் சாய்ந்தமருது கடற்கரையோரம் பாரிய கடலரிப்புக்குள்ளானதால் கரையோரமிருந்த மீனவர்களின் வாடிகள், பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானம், பொழுதுபோக்கு பூங்கா, மீனவர் சங்க கட்டடங்கள் மற்றும் தென்னந்தோட்டம் என்பன பாரிய அழிவுக்கு உட்பட்டிருந்தன.மீன்பிடித் தொழிலை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாமல் கரைவலை மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருந்தனர்.பிரதேச அரசியல்வாதிகளின் பெரும் பங்களிப்புடன் கடலோரங்களில் பாரிய கற்பாறைகளை இட்டதன் மூலம் ஓரளவுக்கு மீனவர்கள் தமது தொழிலை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

சாய்ந்தமருது கடலோரங்களில் பாரிய பாறாங்கற்கள் இடும் நடவடிக்கைகளினால் கடலரிப்புக்குள்ளான கரையோரம் தற்போது பாதுகாக்கப்பட்டுள்ளது.

# ஆரோக்கிய வாழ்வுக்கான விழிப்புணர்வு: ஏறாவூர் பொதுச்சந்தையில் வீதி நாடகம்

**ஏறாவூர் நிருபர்**

மனக் கவலைகளைப் போக்கி மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விசேட திட்டத்தின் கீழ் ஏறாவூர் பொதுச் சந்தையில் வீதி நாடகம் இடம் பெற்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுடன் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக குறிப்பாக நாட்டில் ஆடைத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வீதிநாடகங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட வீதி நாடகம் பொதுச்சந்தையில் நடாத்தப்பட்டது. பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் இந்த வீதி நாடகத்தைக் கண்டுகளித்தனர்.கட்டுநாயக்க, அவிஸ்ஸாவெல்ல, துல்ஹிரிய, திருகோணமலை மற்றும் நாவலப்பிட்டிய போன்ற ஏழு இடங்களில் விழிப்புணர்வு வீதி நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன.



உளரீதியில் பாதிக்கப்பட்ட மற்றும் மன அழுத்தங்களுடன் வாழுகின்ற பெரும்பாலானவர்கள் உளநல ஆலோசனைப் பெறுவதில்லை. இதனால் குடும்ப வாழ்க்கையில் மகிழச்சியின்மை தொழில் தளங்களில் உற்பத்திக் குறைவு, தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குதல், போதைப்பொருள் பாவனை மற்றும் தற்கொலைமுயற்சிகள் போன்றவை இடம்பெறுவதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஐஎல்ஓ திட்ட தலைமையதிகாரி முரளி கணபதி தெரிவித்தார்.

# டெங்கு பரவல் காணிகளை துப்புரவு செய்ய காலக்கெடு

**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்து வில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக் காணிகளை ஒரு வார காலத்திற்குள் துப்பரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எப்.எம். உவைஸ் தெரிவித்தார். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் சக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணியினர் வீடு வீடாகச் சென்று, டெங்கு நோய் தொடர்பாக, மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெத்து வருகின்றனர் .

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கிளை



**பாலமுனை தினகரன் நிருபர்**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கிளை சம்மாந்துறை செந்நெல் கிராமத்தில் நேற்று முன்தினம் நிறுவப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் ஐ.எல். எம்.மாஹிர் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளர் ஏ. அச்சு முகம்மட், பிரதேச சபையின் முன்னாள் எதிர்க் கட்சி தலைவர் டாக்டர் மஜீட், சபையின் முன்னாள் உறுப்பினர்கள், இளைஞர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள் என பலரும் பங்குபற்றியிருந்தனர். சுமார் இருபது பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் கிளைக் குழுவின் தலைவராக ஜாஹீரும், இளைஞர் அணித்தலைவராக மாபாஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

திகாமடுல்ல மாவட்டத்தில் அ.இ. மக்கள் காங்கிரஸ் புனரமைப்பு விடயங்களில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹீர் எடுத்துவரும் முயற்சியினை மாவட்ட மக்கள் பெரிதும் பாராட்டுவதோடு எதிர்கலத்தில் இப்பிராந்தியத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# காலனித்துவத்தின் பின்னர் இன்றுவரை தீர்வு காண முடியாதுள்ள 'நில உரிமை' பிரச்சினை!

காலனித்துவ யுகத்தின் பின்னர், இன்று வரை தீர்க்க முடியாத நாட்டின் மிக அழுத்தமான பிரச்சினை 'நில உரிமை' தீர்வு. அவர்கள் வாழ்ந்த, விவசாயம் செய்த, உரிமம் பெற்ற நிலத்தை, திறந்த சந்தையில் தேவை மற்றும் விநியோக சக்திகளுக்கு ஏற்ப, பல தலைமுறைகளாக மாற்றுவதற்கான வாய்ப்பை இழந்தது பல சமூகபொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்களுக்கு வழிவகுத்தது . உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் 20 இலட்சம் காணி உரிமைகளை சுதந்திரமாக வழங்குவதன் மூலம் காணி உரிமை தொடர்பான மூன்று பிரச்சினைகளில் ஒன்று தீர்க்கப்படும்.

1972 இல் குடியரசு அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும், சுதந்திரத்திற்குப் பிறகு இந்த நாடு எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் மக்களுக்கு நில உரிமையை வழங்குவதே என்பதை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உணர்ந்திருந்தனர். அதனால்தான் குடியரசு அரசின் முதல் சட்டமாக 'நில சீர்திருத்தச் சட்டத்தை' நிறைவேற்றி மக்களுக்கு நில உரிமையை வழங்க முயற்சி செய்தனர். துரதிர்ஷ்டவசமாக, அன்று தொடக்கம் 2023 வரை, மக்கள் வாழும் நிலத்தின் முழு உரிமையையும் மக்களுக்கு வழங்கும் திட்டத்தை உருவாக்க அரசு தவறிவிட்டது.

2002 இலும், 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் மக்களுக்கு முழுமையான காணி உரிமையை வழங்குவதற்காக இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதும், அது வெற்றியளிக்கவில்லை. 2017ஆம் ஆண்டு அன்றைய காணி அமைச்சர் கயந்த கருணாதிலக்கவின் முயற்சிகள் வரைவுச் சட்டமூலத்தில் உள்ள பலவீனம் காரணமாக தோல்வியடைந்தன . இன்று 'உறுமய' என்னும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் அன்று செயல்படுத்தப்படமுடியாத அரச காணிகள், மகாவலி காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணிகளுக்கு சந்தை காரணிகளின் அடிப்படையில் பெறுமதிகளை தீர்மானிக்கக் கூடிய வேலைத்திட்டமாகும்.

பதவிசிறிபுர தொடக்கம் அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் காலனிகளுக்கு காணி பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்டுள்ள கடுமையான நிலைமை காரணமாக, காணி குடும்பத்தை விட்டுச் செல்லாத வகையில் ஒரு பொறிமுறையின் தேவை ஏற்பட்டது. எனவே, விவசாய வர்க்க உறவின் அடிப்படையில் ஒதுக்கி வைப்பதற்கு பிரதேச செயலாளருக்கு மட்டுமே இடமளிக்கும் முறை அதனால் உருவாக்கப்பட்டது. காலனிகளில் முதல் தலைமுறையினர் இரண்டாம் தலைமுறையினருக்கும், இரண்டாம் தலைமுறையினர் மூன்றாம் தலைமுறையினருக்கும் நிலத்தைப் பகிர்ந்தளித்ததால், காணித் துண்டுகளின் எண்ணிக்கை குறைந்தது.

காலப்போக்கில், அந்தப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வளரச்சியடைந்தது. உட்கட்டமைப்பு வளர்ச்சியுடன், பெரும்பான்மையான விவசாய வர்க்கத்தினர் கல்வியில் முன்னேறி வேறு வேலைகளை தேடிக்கொண்டனர். இந்தச் சட்டங்களின் தன்மை மற்றும் விவசாய வர்க்க நபர்களின் உரிமை பரம்பரை காரணமாக, இந்த நிலங்களுக்கு சந்தை மதிப்பு இருக்கவில்லை. மூத்த மகனுக்கு மட்டுமே நில உரிமை கிடைத்ததால், மற்ற குழந்தைகள் ஆதரவற்ற நிலையில் இருந்தனர். அந்த நிலம் மற்ற உறவினர்களால் பயன்படுத்தப்பட்டது, உரிமை உள்ளவர்களால் அல்ல. நில வழக்குகள் குவிந்தன. குடும்பங்களுக்கு இடையே நிலத்தகராறு அதிகரித்தது.

அரசாங்கத்தின் காணி அதிகாரம் பிரதேச செயலாளரிடம் வழங்கப்பட்டது. உரிமம் பெற்ற காணிகளில் எந்தவொரு அபிவிருத்திக்கும் பிரதேச செயலாளரின் ஒப்புதல் தேவைப்பட்டது. அவர் நிலத்தின் எல்லாம் வல்ல கடவுளாக மக்களால் கருதப்பட்டார். இந்த 'சர்வ அதிகாரத்தை' தக்கவைக்க அரசு அதிகாரிகள் உழைத்தபோது, அதை மாற்றி சட்டங்களை இய ற்றும் அறிவோ, ஆற்றலோ, ஆர்வமோ அரசியல்வாதிகளுக்கு இருக்கவில்லை.

பின்னர, அரசாங்க நிலத்தை புறம்போக்கு செய்ய வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்த, பிரதேச செயலாளர்கள் கிராம அதிகாரிகள், காலனி அதிகாரிகள், நில அதிகாரிகள் மற்றும் வேறு அரசாங்க நிறுவனங்களின் (வனவிலங்கு, வன பாதுகாப்பு, நீர்ப்பாசன) அதிகாரிகளிடம் அறிக்கைகளை கோருகின்றனர். இது நிலத்தை அப்புறப்படுத்துவதில் அதிகாரத்துவத்திற்கு வழிவகுத்தது . குடியேற்றப் பகுதிகளில் நிலத்தை அப்புறப்படுத்த லஞ்சம் கேட்பது, பெறுவது அரசு அதிகாரிகளுக்குக் கையின் கீழ் பணம் கொடுக்கும் நடைமுறையாகிவிட்டது. இந்த நடைமுறையால் நிலத் தகராறுகள் நீண்ட கால தகராறுகளாக மாற வழிவகுத்தன.

பண்டைய மன்னர்கள் காலத்தில், இந்நாட்டின் பெரும்பாலான நிலங்கள் 'அரசருக்குச் சொந்தமானவை'. இலங்கையில் சிவில் அதிகாரியாக இருந்த டச். கோட்ரிங்டனின் 'பண்டைய இலங்கையில் நில உரிமை மற்றும் வருமான ஆதாரங்கள்' என்ற புத்தகத்தின்படி, மன்னர் பிரபுக்களுக்கும் விகாரைகளுக்கும், கோயில்களுக்கும் நிலம் கொடுத்தார். அங்கு பயிர்செய்கையை சாதாரண விவசாயிகள் செய்து வந்தனர்.

உரிமையை பறிக்கும் வக்கிரத்தைப் பயன்படுத்தி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள், மாமா, அத்தைகளுக்குள் கடும் மோதல் ஏற்பட்டு, தந்திரங்களைக் கையாண்டு இந்த நிலங்களை அதிகாரிகளிடம் பணம் கொடுத்து கையகப்படுத்துகின்றனர். இதே குழப்பம் இலங்கையின் விவசாய வர்க்கத்திற்கு சொந்தமான நிலங்களிலும் நிலவியது. அரசாங்கத்தால் கொண்டு




**அரசு அனுமதிப்பத்திரம் பெற்ற நிலத்திற்கு முறையான உறுதிப்பத்திரம் வழங்குவது என்பது எப்போதோ செய்திருக்க வேண்டிய அரசப் பொறுப்பாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தால் அந்தப் பொறுப்பை இப்போது நிறைவேற்ற முடிந்துள்ளது**

வரப்பட்ட பல்வேறு ஆணைகள் மற்றும் அதிகாரிகளின் முடிவுகளால் சில நேரங்களில் குழப்பம் மேலும் அதிகரித்தது. வாரிசுரிமையால் நியமிக்கப்பட்ட நிலம் தொடர்பாக சில பிரதேச செயலாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லும்போது, அந்த நிலத்தில் வாரிசுரிமையால் நியமிக்கப்பட்டவருக்கு உரிமை இல்லை என்பது தெளிவாகிறது. இவ்வகையில் இலங்கை யில் காணிகளை அனுபவிப்பதற்கும் உரிமையாக்குவதற்கும் இடையில் கடுமையான முரண்பாடு ஏற்பட்டுள்ளதோடு, தீர்க்க முடியாத சுமார் 6 இலட்சம் காணிப்பிரச்சினைகள் இருப்பதாகவும் தெரிகிறது.

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சிறு அங்கமாக ஆரம்பிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகம் (காணிப்பிரிவு) திணைக்களம், காணிப்பிரச்சினை தீர்க்கும் செயல்முறையை மையமாகக் கொண்டு மாவட்டங்கள் மற்றும் பிராந்தியங்களில் பரந்து விரிந்து பரந்த அலுவலகக் கட்டமைப்பாக வளர்ந்துள்ளது. உதவி, பிரதி மற்றும் மாகாண காணி ஆணையாளர்களாக இருந்தும் இந்த காணிகளின் உரிமையானது மாகாண காணிகள், மத்திய அரச காணிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் காணிகளின் உரிமை பாரியளவில் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளது .

அனுமதிப்பத்திரம் மட்டும் பெற்று நிலத்தை அபிவிருத்தி செய்பவர் அந்த அபிவிருத்தியில் முழு மனதுடன் ஈடுபட நினைப்பதில்லை. ஏனெனில், அந்த நிலம் அபிவிருத்தியடைந்தால், அது அவருக்குக் கிடைக்குமா அல்லது கிடைக்காதா அல்லது அவரது பிள்ளைகளுக்கு அது கிடைக்குமா என்பதும் நிச்சயமற்றது. விவசாய வர்க்கத்தில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் காலனித்துவத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விடயத்தில் இந்த நிலைமை பொதுவானது. நிலத்தின் உரிமையானது விவசாயக் காலனிக்கு தேவையான அரிசி ஆலையை அமைப்பதைக் கூட பாதிக்கிறது. அதனால்தான் இந்த நிலங்களில் கட்டடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவப்படவில்லை.

வாரிசுரிமையை எதிர்ப்பவர்களின் கருத்து என்னவென்றால், ஒரு நிலத்திற்கு சுதந்திர உரிமை வழங்கப்படும் போது, அந்த நிலம் உரிமையாளரால் விற்கப்படும். நிலத்தை அபிவிருத்தி செய்து பராமரித்து வருபவர் , தனக்குத் தேவையில்லாத நிலத்தின் ஒரு பகுதியை, வேறு தேவைக்கு பயன்படுத்த நினைத்தாலோ, நிதி நெருக்கடி ஏற்பட்டாலோ, அந்த நிலத்தின் ஒரு பகுதியை விற்பதை எப்படித் தடுப்பது? மறுபுறம், விவசாயிகள் குடியேறியவர்களின் குழந்தைகள் நிரந்தரமாக விவசாயம் செய்ய வேண்டியதில்லை. அவரவர் திறமைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ற வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. அது மட்டுமின்றி, இந்த நிலங்களுக்கு கடன் பெறுதல், விருப்பமான தொழிலில் ஈடுபடுதல் போன்ற வாய்ப்புகளும் பத்திரம் கிடைத்தவுடன் கிடைக்கும்.

நிலம் வைத்திருக்கும் அப்பா, அம்மா இறந்த பிறகு விவசாயம் செய்ய ஆள் இல்லாததால் காடுகளாகிப் போன நிலங்கள் நாடு முழுவதும் உள்ளன. இந்த நிலங்களை மற்றவர்கள் அபகரிப்பதால் நிலத்தகராறு ஏற்படுகிறது. நிலத்தை விற்று அவர்கள் விரும்பும் வேறு முதலீட்டில் பயன்படுத்த உரிமையாளருக்கும், அடுத்தடுத்த வாரிசுகளுக்கும் வாய்ப்பளிக்கும் பொறுப்பை அரசு நிறைவேற்றியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, பத்திரப்பதிவு மூலம் விலக்களிக்கப்பட்ட காணிகளை சட்டத்தரணியின் ஊடாக இன்னொருவருக்கு வழங்குவதன் மூலம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், சுற்றறிக்கைகள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் மூலம் ஏற்படுத்தியுள்ள மிகவும் சிக்கலான மற்றும் சிதைக்கப்பட்ட சூழ்நிலையில் முடிகிறது .

**கச்சேரியில் நிலத்தின் கடித கட்டுகள்:**

பழைய கச்சேரிகளில் அதிகளவான இடங்கள் பரப்புரைப் பங்கு பட்டியல்கள், செயலக பத்திர மூட்டைகள், நிலங்கள் தொடர்பான பத்திரங்கள் ஆகியவற்றை சேமிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தன. நிலப் பேரேடுகளைத் தூக்குவது மிகவும் சிரமமாக இருந்ததால், அவற்றைத் தூக்குபவர்களுக்கு 'முட்டை கொடுப்பனவு' வழங்க முன்மொழியப்பட்டது என்று புராணக்கதை கூறுகிறது. கச்சேரியில் மிகவும் சக்திவாய்ந்த கிளார்க்காக இருந்தவர் 'நிலம் மற்றும் நீர்நிலைப் பொறுப்பாளர்'.

பிரதேச செயலகங்களில் பெரும்பாலான இடங்கள் காணி பேரேடுகளை சேமிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. நிலப் பகுதியானது தூக்குவதற்குக் கூட கடினமான புத்தகங்களால் நிரப்பப்பட்டுள்ளது. 'ஹெரிடேஜ்' பிரதேச செயலகத்தின் சுமையை குறைக்கும்.

'உறுமய' திட்டம், நில கையகப்படுத்தல் மற்றும் பயன்பாடு தொடர்பில் வரலாற்றில் ஒருபடி முன்னேற்றமாகும். 1972 காணிச் சட்டத்தின் ஊடாக ஹெக்டர் கொப்பேகடுவ – சிறிமா பண்டாரநாயக்க அரசாங்கம் மேற்கொண்ட புரட்சிகரமான நடவடிக்கையின் பின்னர், அரசாங்கம் மக்களுக்கு காணி உரிமை வழங்கும் புரட்சிகரமான தருணம் இது.

உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட இசுரு பூமி, இரத்தின பூமி மற்றும் ரன்பிம அனுமதிப்பத்திரம் உரிய பெரும்பாலோனர் மிகக் குறுகிய காலத்தில் தமது உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்கின்றனர்.

சமீப காலங்களில், 'ஸ்வரணபூமி மற்றும் ஜய பூமி' திட்டங்களின் கீழ் அதிக எண்ணிக்கையிலான உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் காணி வரைபடங்கள் (பிளான்) வரையப்பட்டுள்ள காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இருப்பினும், நடைமுறையில், 1978 முதல் 1994 வரை வழங்கப்பட்ட ஸ்வரணபூமி அனுமதிப்பத்திரங்களின் உரிமையாளர்களில் பெரும்பாலோர் தற்போது இறந்துவிட்டனர். அவர்களின் இரண்டாம் தலைமுறையினர் முறையான முறையில் பத்திரம் பெறுவதற்கான வாய்ப்பு உறுமய இரண்டாம் கட்டத்தின் மூலம் தயாராகி வருகிறது.

2015 முதல் கடந்த 9 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பெரும்பாலான அனுமதிப் பத்திரங்கள் முறையான வரைபடங்களைக் கொண்டிருப்பதாலும், உரிமையாளர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாலும், உறுமய மூலம் அவர்களுக்கே நன்மைகள் அதிகம்.

கடந்த 47 வருடங்களில் 8 ஜனாதிபதிகள் அனுமதிப்பத்திரம் வழங்கிய காணிகளுக்கு உறுதிப் பத்திரம் வழங்கியது சாதாரண சவாலாக இல்லை. அரச அலுவலர்கள் பற்றாக்குறை, தரவு அமைப்புகளைப் பேணல், கணினி உள்ளிட்ட வளங்களின் பற்றாக்குறை, நில அளவையாளர் பற்றாக்குறை என பல சவால்களுக்கு மத்தியில் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், காணித்திணைக்களத்தினர் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர்களின் அர்ப்பணிப்பு மகத்தானது. நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவைகளை மேற்கொண்டு மாகாண காணி ஆணையாளர்கள், மாகாண சபைகள், மாகாண ஆளுநர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அரசு அனுமதிப்பத்திரம் பெற்ற நிலத்திற்கு முறையான உறுதிப் பத்திரம் வழங்குவது என்பது எப்போதோ செய்திருக்க வேண்டிய அரசப் பொறுப்பாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தால் அந்தப் பொறுப்பை இப்போது நிறைவேற்ற முடிந்துள்ளது. 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட இந்தப் பொறுப்பு நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாரிய நடவடிக்கையாகும். 50 வருட காலப்பகுதியில் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரப்பதிவுகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கப்படும் வரை இத் திட்டம் தொடரும்.



**ரஜித் கீர்த்தி தென்னகோன்**
**(தமிழில்: வீ.ஆர்.வயலட்)**

# மனநலம் பாதிக்கப்பட்டுள்ளோரை குணமாக்குவதற்கு உதவி புரிவோம்!

## அம்பாறை, கல்முனை ஆதார வைத்தியசாலைகளில் சிறப்பான சிகிச்சைகள்

மனநலம் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கிறது. உலக சுகாதார கணக்கெடுப்பின்படி நான்கில் ஒருவருக்கு ஓரளவேனும் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இலங்கையில் நான்கு மணித்தியாலங்களுக்கு ஒருவர் என நாளொன்றுக்கு ஒன்பது பேர் மனஅழுத்தத்தினால் தவறான முடிவுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது.

மனிதர்களிடம் தன்னம்பிக்கை குறைவடைவதே மனநோய் ஆரம்பமாவதற்கான ஆணிவேராகும். மனநோய் என்றாலே பைத்தியம் என்றுதான் பலர் நினைக்கிறார்கள். மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்களால் ஏற்படும் பிரச்சினையே மனநலப் பாதிப்பாகும்.

இதற்கு முறையான சிகிச்சையை ஆரம்பத்தில் தொடங்கினால் கட்டுப்படுத்தலாம். உடல் சோர்வு, பசியின்மை, தூக்கமின்மை, கவலை, குற்ற உணர்ச்சி, பயம், கோபம், குழப்பம் ஆகியன அதிகம் ஏற்படுகின்றபோது தம்மை கட்டுப்படுத்த முடியாமல் மனநலப் பாதிப்புக்குள்ளாகின்றனர். மனநலம் பாதிக்கப்பட்டவர்களை ஒரு குழந்தையைப் போல அன்பு, ஆதரவு, அரவணைப்பு காட்டி சரியான சிகிச்சை வழங்கிவந்தால் அவர்களை பாதிப்பில் இருந்து மீட்டெடுக்க முடியும்.

மனநலம் பாதிக்கப்பட்ட பலர் கவனிப்பார் இன்றி வீதிகளில் அங்கும் இங்கும் சுற்றித்திரிகின்றனர். பலர் அவர்களை பரிதாபமாகவும், பரிகாசமாகவும் பார்த்து செல்கிறார்களே தவிர உதவுவதற்கு முன்வருகிறார்கள் இல்லை. மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவிலான மன நோயாளர்களை வீதிகளில் காணக் கூடியதாக இருக்கிறது.

பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் இவர்களும் சுற்றித்திரிவதினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். மட்டக்களப்பு மகிழூர் கிராமத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் வீதியில் செல்வோரை வழிமறித்து முகவரி கேட்பது போன்று நடித்து சிலரை கடித்துக் காயப்படுத்தியுள்ளார். இச்சம்பவத்தால் பலர் பயந்து போயுள்ளனர்.

இதேபோன்று கல்முனையில் தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவ, மாணவிகள் செல்லும் போதும் வருகை தரும் போதும் வீதியில் நிற்கும் மனநோயாளிகள் திடீரென பிள்ளைகள் மீது பாய்ந்து தாக்குகின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட மாணவிகள் கல்வி நிலையங்களுக்கு செல்லவே பயப்படுகின்றனர். சந்தை, ஆலயங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், சிறுவர் பூங்காக்கள், கடற்கரை பகுதிகள், நிகழ்வுகள் நடக்கும் இடங்கள் மற்றும் சனநடமாட்டம் அற்ற இடங்கள் உட்பட பல்வேறு இடங்களிலும் திரியும் இவர்களின் செயல்களால் அனைவரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். சில மனநோயாளிகள் மக்களுக்கு பாதிப்பு இல்லாத நிலையில் அமைதியாகவும், சில நோயாளிகள் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்கின்றனர்.

அவர்களும் மனிதர்களே என உணர்ந்து உரிய சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் சென்று முறையான சிகிச்சைகளை வழங்கினால் மனநோயாளிகளை குணப்படுத்தலாம். இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் ஒவ்வொருவரும் மனஅழுத்தம் காரணமாக பாதிப்பிற்குள்ளாகி வருகின்றனர். இன்று உங்கள் சகோதரர்களுக்கு ஏற்பட்ட அதித மன நலப்பாதிப்பு நாளை உங்களுக்கும் ஏற்படாது என்பதில் என்ன நிச்சயம்? எல்லோரும் மனிதர்களே என உணர்ந்து மன



நலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு கருணை காட்டுவோம். அலர்களையும் வாழவைப்போம்.

அம்பாறை, கல்முனை ஆதார வைத்தியசாலையில் உளநலப் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. பலர் குணமடைந்து தமது சாதாரண வாழ்க்கைக்கும் திரும்பியுள்ளனர். பொதுமக்கள் தமது உளநல பாதிப்புகள், உளநலம் சார்ந்த விடயங்கள் ஆகியவற்றுக்கான மருத்துவம் மற்றும் ஆலோசணை வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வதற்கு கல்முனை ஆதாரவைத்தியசாலைக்கு வருகைதரு முடியும். இதற்கென 1926 என்ற புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது .

பரீட்சை தோல்வி, போதைப் பொருள் பாவனை, காதல், குடும்பப் பிரச்சினைகள், ஏற்கனவே உளநல பாதிப்பிற்குள்ளானவர்கள் உட்பட சகல பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டு உளநலம் சார்ந்த விடயங்களால் அவஸ்தைப்படுபவர்கள் அனைவருக்கும் சிறந்த சிகிச்சையும், ஆலோசணை வழிகாட்டுதலும் அங்கு வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தங்களது உளநலம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு 1926 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் கல்முனை ஆதாரவைத்தியசாலையில் இச்சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பிரதி பணிப்பாளர் டொக்டர் ஆர்.முரளீஸ்வரன் தெரிவித்தார்.

**செ.துஜியந்தன்...**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## மன்னிப்புக்கோரல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் BR 274/23 மற்றும் 7148/24 கொண்டுள்ள வழக்கில் அம்பிலிப்பிட்டிய மொதரவான வீரசிங்ஹ மாவத்தை 02 ஆவது ஒழுங்கையில் 1858 ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் கட்டுகம்பொல அப்புஹாமிலாகே சமீர என்ற நான் 2015 இன் 05 ஆம் இலக்கம் கொண்ட தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் கீழ் குற்றமாகும் கட்டளை மூலம் மட்டுப்படுத்தப்பட்ட மருந்து ஒன்றான PREGABALIN (150mg) என்ற மருந்துகளை (06) வைத்திருந்தது தொடர்பிலான குற்றத்தை ஏற்றதாகவும் அதற்கான ரூபா 10,000/- அபராதத்தை செலுத்தி முடித்ததாகவும் கௌரவ நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் பத்திரிகை அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு இவ்வாறான தவறுகளை இதன் பின்னர் மேற்கொள்வதில்லை என்றும் செய்த தவறு தொடர்பில் அனைத்து இலங்கையர்களிடமும் மன்னிப்புக் கோருகிறேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

**கட்டுகம்பொல அப்புஹாமிலாகே சமீர**

Repeat Your Ad For Better Offers

## கேள்விகோரல் அழைப்பு

### மாவட்ட செயலகம், நுவரெலியா

நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் 2024.05.08ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.05.31 பி.ப. 2.00 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். கேள்விகள் திறத்தல் அன்றே பி.ப. 2.15 இற்கு இடம்பெறும்.

ஜீ.கே.ஜீ.ஏ.ஆர்.பீ.கே.நந்தன,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
நுவரெலியா நிர்வாக மாவட்டம்

## இலங்கைச் சுங்கம்

CDU/TS/2024/09&10

### அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள் / தங்கம்/ தங்க ஆபரணங்கள் / மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சில நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கான கேள்விகோரல் 2024 மே 30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் பிரிவின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களின் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் பிரிவில் 2024 மே 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2024 மே மாதம் 27ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்பு கொள்ளவும்:

011-2430795
011-2143434 நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,
இலங்கைச் சுங்கம்,
சுங்க இல்லம்,
இல. 40, பிரதான வீதி,
கொழும்பு-11.**

## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

பொத்துவில, மஹமூகலன்யாயவில் வசிக்கும் சாம்புகலகெதர சரத் பண்டார, நாம்புகல என்ற நான் அனுமதியின்றி மருந்துகளை தம்மிடம் வைத்திருந்தமை என்ற குற்றச்சாட்டு சம்பந்தமாக குருநாகல் நீதவான் நீதிமன்றத்தில் இலக்கம் 98969/23 (பீ 2093/23) இன் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குற்றத்தை ஏற்றுக் கொண்ட காரணத்தினால் கௌரவ நீதிமன்றத்தினால் 2024 ஏப்ரல் 22ம் திகதி எனக்கு மேற்படி குற்றத்திற்காக பன்னிரண்டாயிரம் (ரூ.12,000.00) தண்டத் தொகை தீர்மானிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

## பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்

### எல்ல பிரதேச சபை

2024 ஆம் ஆண்டிற்காக எல்ல பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக மக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் 2024.07.31 வரை ஏற்கப்படும்.

உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் 2024.07.31 பி.ப. 4.30 இற்கு முன்பு செயலாளர், எல்ல பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அனுப்புதல் அல்லது secretary. ellaps@gmail.com இற்கு ஈமெயில் மூலம் அனுப்புமாறு தயவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

**செயலாளர்,
பிரதேச சபை - எல்ல**

## அறிவித்தல்

### சிலாபம் பிரதேச சபை

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 2020-10-29ஆம் திகதி மற்றும் 2199/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் "பிரதேச சபை வரவு செலவுத்திட்டம்" மற்றும் செயற்படுத்தும் 6ஆம் இலக்க விதியின் பிரகாரம் சிலாபம் பிரதேச சபையினால் 2025ஆம் வருடத்திற்காக தயாரிக்கப்பட்டும் வரவு செலவுத்திட்ட ஆவணம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்குவதற்கான முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். நீங்கள் அந்த முன்மொழிவுகளுடன் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கும் முன்மொழிவுகளை 2024 ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் எனக்கு அனுப்புமாறு தயவுடன் அறிவிக்கின்றேன்.

| | |
|---|---|
| அலுவலக முகவரி | - பிரதேச சபை, சிலாபம் |
| அலுவலக தொலைபேசி இலக்கம் | - 032-2247675 |
| அலுவலக தொலைநகல் இலக்கம் | - 032-2247675 |
| மின்னஞ்சல் முகவரி | - chillawprasa@yahoo.com |

**ஆர்.எம்.பீ.என். ரணதுங்க,
செயலாளர்,
சிலாபம் பிரதேச சபை.**

**2024-05-10ஆம் திகதி சிலாபம் பிரதேச சபையில்.**

## வெளிமடை பிரதேச சபை 2025ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி மதிப்பீடு தொடர்பாக பிரதேச குடிமக்களுக்கு முன்வைக்கும் அறிவித்தல்

இலக்கம் 2199/25 உடைய 2020 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதியினையுடைய இலங்கை ஜனநாயக வர்த்தமானி பத்திரத்தின் அதிவிஷேட அறிவித்தலுடன் தொடர்புடையது.

இங்கு 5.1 அத்தியாயத்தின்படி வெளிமடை பிரதேச சபை எல்லைக்குள் 2025 ஆம் வருடத்திற்காக மூலதன செலவு மதிப்பீட்டு படிவம் தயாரிப்பதற்கான அபிவிருத்தி ஆலோசனை முகாமைத்துவ குழு அனுமதியினை பெறுவதற்கு 2024.06.30ஆம் திகதிக்கு முன் செயலாளர், பிரதேச சபை, வெளிமடை எனும் முகவரிக்கு வழங்குமாறு அறிவிக்கின்றேன்.

**செயலாளர்,
பிரதேச சபை
வெளிமடை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கல்வி அமைச்சு
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்**

SLIATE

### SLIATE / உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் - 2024/2025

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு (ATIs) ஜெனிட்டோரியல் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ஜெனிட்டோரியல் சேவைகளுக்காகப் பதிவைப் பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | நிறுவனம் | தொடர்பிலக்கம் |
|---|---|---|
| 01 | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், இல. 320, ''ஜனவத்துபியச'', T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 | 011-2691307 |
| 02 | ATI - கொழும்பு, இல. 42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு-15 | 011-2521152/011-2521282 |
| 03 | ATI - தெஹிவளை, வைத்ய வீதி, தெஹிவளை | 011-2738349 |
| 04 | ATI - கண்டி, இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2232097 |
| 05 | ஹாடி ATI - அம்பாறை, இங்கினியாகல வீதி, அம்பாறை | 063-2222056/ 063-2223035 |
| 06 | ATI - யாழ்ப்பாணம், இல. 665/5, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595/ 021-2229803 |
| 07 | ATI - கேகாலை, பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297/-035-2221713 |
| 08 | ATI - திருகோணமலை, கிண்ணியா வீதி, வரோதயா நகர், திருகோணமலை | 026-2223232/-026-2050617 |
| 09 | ATI - பதுளை, கிறீன்லேன்ட் டிரைவ், பதுளை | 055-2230218/ 055-2223818 |
| 10 | ATI - கம்பஹா, நைவல எசெல்ல, நைவல, வெயாங்கொட | 033-2287519/ 033-2292544 |
| 11 | ATI - தங்காலை, யட்டவத்த, நெதோல்பிட்டிய, தங்காலை | 047-2241845/ 047-2241846 |
| 12 | ATI - வவுனியா, A9 வீதிக்கு அப்பால், வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 |
| 13 | ATI - நாவலப்பிட்டிய, ஹைன்போர்ட் எஸ்டேட், மாபாகந்த, நாவலப்பிட்டிய | 054-205063 |
| 14 | ATI - மட்டக்களப்பு, பிரதான வீதி, கோவில் குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519/ 065-2247470 |
| 15 | ATI - சம்மாந்துறை, பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 |
| 16 | ATI - அநுராதபுரம், அக்கர III, அனுலா மாவத்தை, பந்துலகம, அநுராதபுரம் | 025-223441 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய நிறுவனத்தின் நிதிப் பிரிவிற்கு 3000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2024-05-27ஆம் திகதி முதல் 2024-06-18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இயைபுடைய நிறுவனத்தின் நிதிப் பிரிவிலிருந்து (ATI/தலைமை அலுவலகம்) முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

சகல விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வருடாந்த ஒப்பந்த கேள்வி விலையின் 1% தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் ஏதாவது வர்த்தக வங்கியொன்றில் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளார் நாயகம் / இயைபுடைய நிறுவனத்தின் பணிப்பாளரின் பெயரில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''(இயைபுடைய நிறுவனத்தின் பெயர்) ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் - 2024/2025'' எனக் குறிப்பிட்டு இயைபுடைய நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். ஒவ்வொரு நிறுவனத்திற்குமான விலைமனுக்கள் 2024-06-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுக்கள் இயைபுடைய நிறுவனங்களில் முடிவுறுத்தப்படும் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

மேலதிக விபரங்களை கொழும்பு-10, இல.320, டீ.பீ.ஜாயா மாவத்தை, இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து (தொலைபேசி: 011-2691307 நீடிப்பு 118/233) அல்லது வேலை நாட்களில் இயைபுடைய நிறுவனத்தின் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு விபரங்களுக்கு தயவு செய்து www.sliate.ac.lk இணையதளத்தைப் பார்வையிடவும்.

விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் இடங்களுக்கு விஜயம் செய்து பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும் என்பதுடன் சேவைகளின் விபரங்கள், இயல்பு மற்றும் தேவைப்பாடுகள் குறித்தும் மற்றும் தங்களை முழுமையாக அறிமுகப்படுத்தல் என்பவற்றை விலைக்கோரலில் உள்ளடக்குதல் வேண்டும்.

**தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 320, ''ஜனவத்துபியஸ'', டீ. பீ. ஜாயா மாவத்தை,
கொழும்பு-10**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460 ) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**காணி அமைச்சின் குறிப்பு இல:- 4-3/9/2014/WS/233**
**எனது குறிப்பு இல:- KMB/LAN/ACQUI/2/60**

கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்கிறது மேலதிக விபரங்களுக்கு 2363/88,2023.12.23ந் திகதி பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2378/37, 2024.04.05ஆம் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : தென் மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : கம்புறுப்பிட்டிய |
| கிராமத்தின் உத்தியோகத்தர் பிரிவு | : 317-B கரகொட உயன்கொட 1அத கிழக்கு |
| கிராமத்தின் பெயர் | : கரகொட உயன்கொட |
| காணியின் பெயர் | : நுகேஹேன அல்லது அளுத்தெனியே கனத்த |
| பட இலக்கம் | : கடஸ்டர வரைபடம் 820244 வலயம் 03 தாள் இலக்கம் 1படம். |
| துண்டு இலக்கம் | : 01 |

**சின்தா.பீ.டபி.வன்னி ஆரச்சி
பிரதேச செயலாளர்/ காணி கொள்வனவு உத்தியோகத்தர்
கம்புறுப்பிட்டிய
2024.05. மாதம் 20 திகதி
கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகத்தில்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ.100,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மே 29ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124H309 | LKA18224K292 | LKA36425E304 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 50,000 | 80,000 | 160,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2024 மே 29 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2024 மே 31 |
| வழங்கப்படும் திகதி | : 2024 மே 31 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024 மே 29, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொது மக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்கள்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### பொதுசன உறவு (PR) நிறுவனங்களை பதிவு செய்தல் முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

டிஜிட்டல் தளத்தை பராமரித்தல், சமூக வெளிக்களம், மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவம் உட்பட விரிவான தொடர்பாடல் சேவைகளை நிர்வகிக்க முடியுமான தகுதிபெற்ற பொதுசன உறவு நிறுவனங்களை பதிவு செய்வதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு உத்தேசித்துள்ளது. பொதுசன ஈடுபாட்டை மேம்படுத்துவதில் அந்த நிறுவனம் முக்கிய பங்கொன்றை ஆற்ற வேண்டும் என்பதோடு அமைச்சின் முயற்சிகள் தொடர்பில் பங்குதாரர்களை சிறந்த முறையில் அறிவூட்டல் வேண்டும்.

அதன்படி, 2024 மே 28 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூன் 10 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை அமைச்சின் சிறாப்பருக்கு செலுத்தி அலுவலக நேரங்களில் RFP ஆவணங்களை பெறலாம். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவு ஆவணத்தை 2024 ஜூன் 11 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,
அமைச்சு பெறுகை குழு,
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
7ஆவது மாடி, "செத்சிறிபாய கட்டம் II"
பத்தரமுல்லை**

**தொ.: 011 2187213 தொலைநகல்: 0112 187213
மின்னஞ்சல்: procurement@transport.gov.lk**

# கேள்விக்கான அழைப்பு

**மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு**
**சமூக சேவைகள் திணைக்களம்**

## 2024/2025 ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவை வழங்கும் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கேள்விகோரல்

**பெறுகை இல : DSS/03/SERVICES/NCB/2024/01**

01. சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால், திணைக்களத்தின் கீழ் நடத்திச் செல்லப்படும் கீழ்க்காணும் பதினாறு (16) நிறுவனங்களுக்குாக 2024/2025ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
    - i. தொழிற்பயிற்சி நிலையம், லியனமுல்ல, சீதுவ
    - ii. தொழிற்பயிற்சி நிலையம், அமுனு கும்புர , வத்துருகம, கம்பஹா
    - iii. தொழிற்பயிற்சி நிலையம், தெலம்புயாய, அங்குனுகொலபெலஸ்ஸ
    - iv. தொழிற்பயிற்சி நிலையம், வாபின்ன, வத்தேகம, கண்டி
    - v. தொழிற்பயிற்சி நிலையம், கெட்டவல, வெல்ல, கண்டி
    - vi. சிறுவர் வழிகாட்டல் நிலையம், இல.11, வெலி வீதி, பத்திரகொட, மஹரகம
    - vii. ஜயவிருசெவன பராமரிப்பு இல்லம், நான் அம்பலம்வத்த, புவக்பிட்டிய, அவிசாவளை
    - viii. ஜயவிரு சமாதி புனர்வாழ்வு நிலையம், நோன் அம்பலவத்த, புவக்பிட்டிய, அவிசாவளை
    - ix. விபவி தொழிற்பயிற்சி நிலையம், பஹலமீபாகம, குக்குலேகம, கலவான.
    - x. தொழிற்பயிற்சி நிலையம், தேவால வீதி, பொத்துவில, மாதம்பை
    - xi. முன்தொழில் தேர்ச்சி அபிவிருத்தி நிலையம், 115/16, அமரசேக்கர மாவத்த, அத்துருகிரிய வீதி, கொட்டாவ.
    - xii. தொழிற்பயிற்சி நிலையம், பொன்னகர், கிளிநொச்சி
    - xiii. தொழிற்பயிற்சி நிலையம், கும்புறு மூலை, வாழைச்சேனை, மட்டக்களப்பு
    - xiv. ஹம்பாந்தோட்டை மாவட்ட சிறுவர் வழிகாட்டல் நிலையம். (சித்திஜய) ஒலுவில வீதி, மல்பொத்தாவ, அம்பலாங்கொடை
    - xv. தோலங்கடுவ இணைந்த தொழிற்பயிற்சி நிலையம், தோலங்கமுவ, வரக்காபொல.
    - xvi. மனுசன் பியச ரியன்சி அலகியவத்த, மகளிர் பராமரிப்பு நிலையம், பட்டுகம்மன, பலாங்கொடை.
02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் (NCB) இடம்பெறும்.
03. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்வதாரர்களுக்கு மேலதிக விபரங்களுடன் சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத்தொகுதியை, 2024.05.28 முதல் 2024.06.13 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையும், 2024.06.14 பி.ப.1.00 வரை ரூ.3500.00 (மூவாயிரத்து ஐநூறு) மீளளிக்கப்படாத தொகையை சமூக சேவைகள் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்துமூல வேண்டுகோளை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்விதாரர்களால் கேள்விகளை சமர்ப்பிக்கும்போது இல.1 இல் குறிப்பிடப்படும் சகல நிறுவனங்கள் (16 நிறுவனங்கள்) இற்கும் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. தகைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மேலதிக விபரங்களை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
06. இரு பிரதிகளுடனான கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் - 2024.06.14 பி.ப.2.00 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து சமூக சேவைத் திணைக்கள தலைமையகத்தின் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
07. ஒரு கேள்விதாரருக்கு சமர்ப்பிக்க முடிவது ஒரு கேள்விக்கு மட்டுமே
08. கேள்வியுடன் ரூ.380,000.00 (மூன்று இலட்சத்து எண்பதினாயிரம்) பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கி அல்லது காசாக சமூக செவைகள் பணிப்பாளரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். அக்கேள்விப் பிணை, 2024.07.14 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
09. கேள்விதாரர்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்தாது பரீட்சித்துப் பார்க்கலாம்.
10. தலைவர்,
    திணைக்கள பெறுகைக்குழு,
    சமூக சேவைகள் திணைக்களம்,
    இரண்டாம் மாடி, IIம் கட்டம், செத்சிரிபாய, பத்தரமுல்ல, இலங்கை.
    தொ.பே - +94112187058 பெக்ஸ் : +94112187060
    மின்னஞ்சல் - dirssdss@gmail.com

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

### 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விமான சேவைகள் எரிபொருள் பொறுப்பு காப்புறுதி திட்டத்திற்கான விலைமனுக்கள்

**B/30/2024**

2024/ 2025 ஆண்டுகளுக்காக கட்டுநாயக்கவிலுள்ள பண்டாரநாயக்கே சர்வதேச விமானநிலையம், ஹம்பந்தொட்டவிலுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம், இரத்மலானவிலுள்ள கொழும்பு சர்வதேச விமானநிலையம், பலாலியிலுள்ள யாழ்ப்பான சர்வதேச விமானநிலையம் மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையங்களில் அதனது செயற்பாடுகள் தொடர்பாக 2024 ஜூலை 15 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும். ஒரு வருடத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு விமான சேவைகள் எரிபொருள் பொறுப்பு காப்புறுதி திட்டத்தை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்காற்றல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு பெற்ற அவர்களின் முகவர்கள் அல்லது காப்புறுதி தரகர்கள் மற்றும் தகுதியுள்ள, புகழ்வாய்ந்த காப்புறுதி சேவை வழங்குனர்களிடமிருந்து கொழும்பு-09, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

விலைமனுக்கோரல் ஆவணமானது http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது 2024.06.14 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைமனுவிற்கும் வரிகள் அடங்கலாக 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக இபெகூ தலைமையக காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள இறுதி தினத்தன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுவானது பதிவிறக்கம் செய்யப்பட்டால் மக்கள் வங்கி தலைமையகத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்டு விலைமனுவுடன் பற்றுச்சீட்டானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுவானது 2024.06.17 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு மூடப்பட்ட நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுவை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படும் ஒவ்வொரு பொது ஒப்பந்தத்திற்கும் வளமுள்ள விலைமனுதாரர் http://eroc.drc.gov.lk / என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் பொது ஒப்பந்த சட்ட (பிசிஏ) 3 சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு மே/பா.,**
**01 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| விபரம் | டம்ப் டிரக்குகளின் ஆலைக்கான சராசரி எண்ணிக்கை (டிப்பர்கள்) |
|---|---|
| பொலன்னறுவை அஸ்போல்ட் ஆலையில் அஸ்போல்ட் போக்குவரத்து<br>ஒப்பந்த இலக்கம் : RDA/DPR/PRO/WK/NCB/ASPL/2024/73 | 07<br>(15 MT) |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.05.27** ஆம் திகதி முதல் **2024.06.18** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## விலைமனுக்கோரல் அழைப்பு

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை**

### Polybags கொள்வனவு - 2024

பெறுகை இலக்கம் : E/7/G/PB/2024

01. தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால், 2024 ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்படும் பொலிபேக் தொகையினைக் கொள்வனவு செய்துகொள்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பொலிபேக் | 2,000,000 |

02. கேள்வி கோரலானது, தேசிய போட்டி ரீதியிலான கேள்விகோரல் முறைமையின் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டும் தகைமையுள்ள கேள்விதாரர்கள் தென்னைப் பயிச்செய்கைச் சபையின் வழங்கல் அலுவலரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன் கீழ்க்காணப்படும் முகவரியில் வார வேலை நாட்களில் 2024.05.27 முதல் 2024.06.18 வரை மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை விபரக்குறிப்புகளுடன் கூடிய கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பெற்றுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது வழங்குநர்கள் மாத்திரம் இதற்காக கேள்விகளை சமர்ப்பிக்கலாம்.
05. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன், எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூபா 15,000.00 இற்கான தொகையொன்றை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிரதான அலுவலகக் காசாளரிடம் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப்படிவத் தொகுதியொன்றை 2024.06.18 வரை பெற்றுக்கொள்ளலாம்.
06. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 2024.06.19 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2024.06.19 அன்று பி.ப.2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும் அவ்வேளையில், கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். அனைத்து கேள்விகளுடனும் கேள்வித் தொகையின் 1% இற்குக் குறையாத பொது முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை இற்கு, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிபந்தனைகளற்ற கேள்விப் பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (காப்புறுதிப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)
07. உங்கள் கேள்விகள், முத்திரையிடப்பட்ட உறையொன்றில் சேர்க்கப்பட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில், "பொலிபேக் கொள்வனவு - 2024" எனக்குறிப்பிட்டு கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் 2024.06.19 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அல்லது 2024.06.19 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரியின் முதலாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை**
**9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**
**தொ.பே. இல: 0112193457**
**தொலைநகல் : 0112861332**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை போக்குவரத்து சபை (இபோச)**

## டோனர் காட்ரிஜ்களை வழங்குவதற்கான விலைமனு

**பெறுகை இல : SLTB/TS/GEN/2024/11**

1. அலுமினியம் மற்றும் நாக முலாமிடப்பட்ட தகடுகள் வழங்கலுக்காக 2024.06.14 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் இபோச பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2024.05.27ஆம் திகதியிலிருந்து 2024.06.13ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, கிருளவீதி, 200ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விபரம் | விலைமனுப்பிணை (ரூ) |
|---|---|
| டோனர் காட்ரிஜ்களை வழங்குதல் | கீழ்க்காணும் ஓர் மொத்தப் பெறுமதிக்கு டோனர் காட்ரிஜ்களுக்கான விலைமனுதாரர்கள் கோரல் வேண்டும்.<br>ரூ. 1.5mn அல்லது குறைந்த - ரூ.1500.00<br>ரூ. 1.5mn இற்கு மேல் 3.0 mn வரை - ரூ. 30,000.00<br>ரூ. 3.0mn இற்க மேல் 10.0 mn வரை - ரூ.100,000.00<br>ரூ. 10.00mn இற்கு மேல் 20.0 mn வரை - ரூ. 200,000.00<br>ரூ. 20.00 mn இற்கு மேல் - ரூ. 500,000.00 |

2. டோனர் காட்ரிஜ்களின் தேவைப்படும் குழு நாமத்தின் உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் பெற்ற வழங்குநர்கள் மாத்திரம் விலைமனுக்கோருவதற்கு தகைமை பெறுவர்
3. எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான மூலப்பிரதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் அவ்வாறான விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்கள் 2024.09.13 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும், ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதிலிருந்து ஒரு (1) வருடத்திற்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட விலைகள் நிலையாகவிருத்தல் வேண்டும். கடன் வசதிகள் 30 நாட்களில் காலாவதியாகும்.
5. மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருப்பதுடன் 2024.05.03 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இ.போ.ச. இன் முதலாவதான எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததாகவும் நிபந்தனையற்ற வகையில் ரொக்கப் பணத்தில் மாற்றக் கூடிய தன்மையிலிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுக்காற்றல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற காப்புறுதி முகவராண்மையொன்றினால் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும். செல்லுபடியாகுத் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுப்பிணையும் நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது பெயர் முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
7. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் "Supply of Toner Cartridges" என குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024.06.14 மு.ப. 10.30 மணிக்கு மூடப்படும். கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்தின் இபோச பெறுகைக் குழு செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இல. 200, கிருளவீதி,**
**கொழும்பு-05.**

**விசாரணைகள்: செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056110. தொலைபேசி/ தொலைநகல்:011 2588457**

---

# பெறுகை அறிவித்தல்

## பெல்மடுள்ள பிரதேச சபை – சப்ரகமுவ மாகாணம்

கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக பெல்மடுள்ள பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரியினால் 2024.05.28 முதல் 2024.06.12 மு.ப. 11.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | வேலை விடயம் | அண்ணளவான மதிப்பீட்டு வேலைப் பெறுமதி (ரூ.மி) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைமுறி (ரூ) | ஒப்பந்தப் பதிவும் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | உத்தேச ஹெலபொஜி ன்ஹல நிர்மாணம் கெட்டேதென்ன - கஹவத்த | 17.9 | 7500.00 | 179,500.00 | C6/C5 |

02. இக்கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், இக் கைத்தொழில் ரூ.50 மில்லியனுக்கு குறைவானபடியால் அரச நிதி சுற்றுநிரூப இல (2016/04/02) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரர்கள் தேந்தெடுக்கப்படுவர். அச்சுற்று நிருபத்தின் பிரகாரம் பின்னர் விநியோகிக்கப்படும் அரச நிதிச் சுற்றுநிருபம் ( 2023/03, 2023/03) மற்றும் (2016/04) என்று சுற்றுநிருபங்களும் பெறுகை விடயத்துடன் பொருந்தும்.
03. 2024.05.28 முதல் 2024.06.11 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தி பெல்மடுள்ள பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. சகல கேள்விதாரர்களும் இக்கைத்தொழிலிற்காக மேற்படி கேள்வி பிணைமுறிப் பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றை 2024.06.12 முதல் 2024.10.08 வரை செல்லுபடியாகுமாறு, "செயலாளர், பிரதேச சபை, பெல்மடுள்ள" பயனாளியாக பெயர் குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைத் தொகையாக பிரதேச சபையில் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக்கைத்தொழில் பற்றிய விபரங்களை பெல்மடுள்ள பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ.பே. இலக்கம். 0452274375 மூலம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.06.12 மு.ப.11.00 இற்கு அல்லது அதற்கு முன் பெல்மடுள்ள பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழில் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல் பிரதியை வேறு உறையில் இட்டு உறையின் இடது மூலையில் கைத்தொழில் பெயர் மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2024.06.12 மு.ப. 11.15 இற்கு பெல்மடுள்ள பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது அரைவாசியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெல்மடுள்ள பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
09. சகல கேள்விகளும் 2024.09.10 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**2024.05.27ம் திகதி**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பெல்மடுள்ள பிரதேச சபை,**
**பெல்மடுள்ள**

# மாநகர சபை – குருநாகல்

## பெறுகை அறிவித்தல்

**குருநாகல் மாநகர சபைக்கு சொந்தமான கீழுள்ள கடைகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| பெயர் | சதுர அடி அளவு | குத்தகை காலம் | கேள்வி படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விமனு பிணை தொகை | குறைந்தபட்ச விலைமனு (வெட் தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| MC PLAZA கடை இலக்கம் C 01 ஐ குத்தகைக்கு விடுதல் | 154.42 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 6,176,800.00 |
| MC PLAZA கடை இலக்கம் 02 ஐ குத்தகைக்கு விடுதல் | 179.97 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 7,198,800.00 |
| MC PLAZA கடை இலக்கம் D இனை குத்தகைக்கு விடுதல் | 179.97 | 49 | 3,000.00 + VAT | 10,000.00 | 6,298,950.00 |
| ராஜஹில்ல உணவகக் கடை இலக்கம் 01 மற்றும் 02 ஐ குத்தகைக்கு விடுதல் | 118.5 | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 100,000.00 மாத வாடகை |
| வேஹெர சந்தைத் தொகுதியின் D பகுதியை குத்தகைக்கு விடுதல் | 978.50 | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 15,000.00 மாத வாடகை |
| புதிய கடை தொகுதியின் கடை இலக்கம் 38 ஐ குத்தகைக்கு விடுதல் | 179.38 | 01 | 3,000.00 + VAT | 10,000.00 | 10,000.00 மாத வாடகை |

மேல் குறிப்பிடப்பட்ட துண்டுகளுக்கான விலைமனு ஆவணத்தை 2024.05.27 ஆம் திகதி தொடக்கம் 2024.06.18 ஆம் திகதி வரை பி.ப. 2.00 க்கு முன்னர் அலுவலக நேரத்தில் குருநாகல் மாநகர சபையின் கணக்குப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். 2024.06.19 ஆம் திகதி பி.ப. 2.00க்கு மாநகர சபை குழுக் கூட்ட மண்டபத்தில் கேள்விமனு திறக்கப்படுவதோடு, விலைமனுதாரருக்கு அல்லது பிரதிநிதி ஒருவருக்கு அதற்காக பங்கேற்க முடியும்.

**விபரங்களுக்கு**
தொலைபேசி – 037-4941869
மின்னஞ்சல் - ginumviyadam@gmail.com
தொலைநகல் - 037 2228136

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**குருநாகல்**
**2024.05.27**

# கேள்வி அறிவித்தல்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

### நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான களுத்துறை நகர மத்தியில் அமைந்துள்ள வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடை அறைகள் 14ஐ வியாபார விடயங்களுக்காக 30 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குதல்

1.0 நகர அபிவிருத்தி அதிகார சபையினால் களுத்துறை நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரு மாடி வர்த்தக கட்டிடத் தொகுதியின் தரைமாடியில் அமைந்துள்ள கடை அறைகள் 14 (பதினான்கு)ஐ வர்த்தக விடயங்களுக்காக 30 வருட கால எல்லைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கும் முகமாக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2.0 கேள்விப்பத்திர தொகுதிக்காக ரூ.2500/- வீதம், அதனோடு சம்பந்தப்பட்டு இருக்கும் அரச சகல வரித் தொகையுடன் (ரூபா. 3023.75) செலுத்தி பத்தரமுல்ல, “செத்சிரிபாய”, 6ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்தில் மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் காசு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, தலைமையகத்தின் பெறுகைப் பிரிவிற்கு அல்லது இவ் அதிகாரசபைக்கு உரிய களுத்துறை மாவட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

3.0 ஒரு கேள்விப்பத்திரம் செல்லுபடியாதல், ஒரு கடை அறைக்காக விண்ணப்பிப்பதற்கு மட்டுமே, விண்ணப்பதாரியொருவர் ஒரு அறைக்கு மேல் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பின் அதற்காக வேறுவேறாக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் கால எல்லைக்குள் தலைமையகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து அல்லது களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் கட்டணம் இன்றியே கேள்விப் பத்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4.0 கேள்விப்பத்திரங்கள் 2024.05.27 முதல் 2024.06.13 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை விநியோகிக்கப்படும்.

5.0 கடை அறைகளுக்காக கொள்வனவாளர்களைத் தேர்ந்தெடுப்பது, கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் கடை அறைகளுடன் சம்பந்தப்பட்ட அடிப்படை விலையை விடவும் கூடுதலாக சமர்ப்பிக்கப்படும் தொகையின் அடிப்படையிலாகும்.

| கடை அறை இலக்கம் | கடை அறையின் அளவு | | கடை அறை ஒன்றிற்கான மாதாந்த வாடகை ரூ. | கடை அறை ஒன்றிற்கான அடிப்படை விலை ரூ. | பிணைமுறி (BID Bond) (ரூ) |
|---|---|---|---|---|---|
| | சதுர மீட்டர் | சதுர அடி | | | |
| 1 | 19.64 | 211 | 18,000.00 | 1,980,000.00 | 170,000.00 |
| 3 | 19.36 | 208 | 18,000.00 | 1,980,000.00 | 170,000.00 |
| 5 | 19.47 | 209 | 18,000.00 | 1,980,000.00 | 170,000.00 |
| 7 | 19.70 | 212 | 18,000.00 | 1,980,000.00 | 170,000.00 |
| 21,22,26 | 19.4 | 208 | 18,000.00 | 1,980,000.00 | 170,000.00 |
| 31,32 | 19.4 | 208 | 20,100.00 | 2,200,000.00 | 188,000.00 |
| 39,40 43 | 10.5 | 113 | 9,000.00 | 990,000.00 | 85,000.00 |
| 44 | 16.2 | 174 | 13,500.00 | 1,485,000.00 | 125,000.00 |
| 45 | 15.9 | 171 | 13,500.00 | 1,485,000.00 | 125,000.00 |

6.0 பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல், 2024.06.14 மு.ப. 11.00 இற்கு முடிவடையும். பொறியிட்டு பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய), “செத்சிரிபாய”, கட்டம் I நிர்வாக கட்டிடத்தொகுதியில் 6ஆம் மாடியில் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும், அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “களுத்துறை வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடை அறைகளுக்கான விலைமனுக்களை சமர்ப்பித்தல்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

7.0 கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் சகல கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும்.

8.0 கேள்விப் பற்றிய மேலதிக தெளிவுபடுத்தல்கள் மற்றும் கட்டிட திட்டமிடல் பற்றிய பரீட்சிப்பதற்கு தேவைப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பத்தரமுல்ல, “செத்சிரிபாய”, 6ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவில் அல்லது களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(தொ.பே.இல.: 011 - 2875916 -20 நீடிப்பு 2950 அல்லது 011 - 2873040 களுத்துறை மாவட்ட அலுவலகம் 034 - 2226570)

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய)**
**மாநகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6ம் மாடி, “செத்சிரிபாய”**
**பத்தரமுல்ல.**

# உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்கள், மருத்துவ உபகரண துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர் சார்பாக கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) (மில்லியன்களில் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Laparoscopy System | 02 | 110.00 | 20,000.00 |
| 02 | Infant Warmer with Resuscitator | 20 | 80.00 | 12,500.00 |
| 03 | Echocardiography Machines | 04 | 120.00 | 20,000.00 |
| 04 | Suction Apparatus (Double Jar) | 80 | 35.00 | 3500.00 |
| 05 | Probe for Ultra Sound Scanner Machine | 102 | 170.00 | 35,000.00 |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவிருத்தல் வேண்டும்.
4. கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் கணக்காளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, ஒவ்வொரு விலைமனுதாரரும் 5 மில்லியன் இலங்கை ரூபாவை விஞ்சும் கேள்வியிடல் தொகையின் பொருட்டு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-05-27ஆம் திகதி முதல் 2024-06-24ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரு பிரதிகளில் முன்வைத்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு உறைகளில் இட்டு ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறியிடப்பட்ட உறையினுள் இட்டு, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு, முத்திரைக்குறி பொறித்து அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கம்’’ என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, இல.27, டி சேரம் பிளேஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024-09-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியாக நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை வங்கி உத்தரவாதம் 2024-10-22ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவின் கணக்காளரிடமிருந்து 2684732 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27,**
**டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு-10**

# சுகாதார அமைச்சு

## விலைமனு கோரல்

### எய்ட்ஸ், காச நோய் மற்றும் மலேரியா ஆகியவற்றுக்கான உலகளாவிய நிதித் திட்டம் (GFATM)

**தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட பாதிக்கப்படக்கூடிய மற்றும் முக்கிய சமூகங்களுக்கான IEC பொருட்களின் மேம்பாடு மற்றும் மீள் அச்சிடலின் பெறுகை**

தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட பாதிக்கப்படக்கூடிய மற்றும் முக்கிய சமூகங்களுக்கான IEC பொருட்களின் மேம்பாடு மற்றும் மீள் அச்சிடலின் பெறுகைக்காக தகுதியுடைய வழங்குநர்களிடம் இருந்து GFATM திட்டத்தின் கீழான தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| Lot No: | Description | Quantity | Bid Security (LKR) | Bid Validity Period in days |
|---|---|---|---|---|
| Lot - 01 | Pull up flex banner with design charges (10 by each Type)<br>10 Themes | 100 | 13,000.00 | 90 days from bid closing date |
| Lot - 02 | Printing leaflets with design charges (35,000 by each Type)<br>Two types of leaflets | 70,000 | 21,000.00 | |

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. அனைத்து தொகுதிக்காகவும் 2000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து பொது விடுமுறை நாட்கள் தவிர்த்து **2024 மே 27ஆம் திகதி** திங்கள் தொடக்கம் வெள்ளி வரை **2024 ஜுன் 25ஆம் திகதி வரை** அந்த இரண்டு நாட்களும் உட்பட மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வரை தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், சுகாதார அமைச்சு, இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெறலாம்.

   நிறுவனம் ஒன்றுக்கு ஒவ்வொரு பெறுகைக்காகவும் ஒரு தொகுதி விலைமனு ஆவணங்கள் மாத்திரமே வழங்கப்படும்.
3. முறையாக பூர்த்தி செய்யப்பட்டு வெற்று தபால் உறையில் இடப்பட்ட ஓர் அசல் உடன் ஒரு நகலைக் கொண்ட அனைத்து விலைமனுக்களையும் **2024 ஜுன் 25ஆம் திகதி** விலைமனுக்கள் மூடப்படும் நேரமான மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது நிர்வாக அதிகாரியின் அறையில் (A/O), தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம், சுகாதார அமைச்சு, இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“GFATM/HIV/FR/2023/056”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.
4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் GFATM-NSACP பெறுகை அலுவலகம், சுகாதார அமைச்சு, 7ஆவது மாடி, மிட்ஹவுஸ் கட்டிடம், இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 இல் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.
5. விலைமனுக்களை திறக்கும் நேரத்தில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பொதுவெளியில் அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு,
தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம்,
இல. 29, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10.

தொலைபேசி: 070 4986708/ 011 2667163

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - ஹம்பாந்தோட்டை

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் பங்கி ஹம்பாந்தோட்டை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 12.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை செய்யப்படும் திகதி 13.06.2024**

| ஏலவிற்பனை செய்யப்படும் இடம் | தங்காலை கிளை - அரங்கம் |
|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | ஹம்பாந்தோட்டை, தங்காலை, அம்பலாந்தோட்டை அங்குணுகொலபெலஸ்ஸ், சூரியவெவ, மித்தெனிய, ரன்ன, வீரகெட்டிய, வலஸ்முல்லை |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | வீரவில, தங்காலை, ஹுங்கம, கட்டுவன |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம் . ஹம்பாந்தோட்டை,**
**தங்காலை கிளை 12 ஆம் மாடி, 164A, மாத்தறை விதி, தங்காலை**
**தொலைபேசி இல. 047-2220902 / 0472220903**

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

118

**ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

DAE-6808 TATA XENON, 2016, CAB கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 034410

LD-8710 JMC, 2007, CAB கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0714542958. 034416

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

### மேல் மாகாணத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை மேல் மாகாண, மாகாண சபை

## ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான முன்மொழிவிற்கான தேவைப்பாடு (RFP)

அத்தனகல்ல, பெட்டியாகந்தவில் பைரோலிசிஸ் தாவரத்தின் மாற்றியமைத்தல் மற்றும் செயற்பாட்டிற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை நிறைவேற்றுவதற்காக போதுமானளவு ஆற்றலையுடைய எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களிடமிருந்து மேல் மாகாண மாகாண சபையின் கீழ் செயற்படும் நியதிச்சட்ட சபையொன்றான மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையின் (WMA-WP) சார்பாக கேள்விச் சபையின் தலைவர் இத்தால் முன்மொழிவுகளை அழைக்கின்றார்.

1. இச்செயற்றிட்டமானது WMA-WP மற்றும் தெரிவு செய்யப்பட்ட எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களுடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டமாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
2. நிகரான செயற்றிட்டங்களை அமுல் நடத்துவதில் ஆற்றல் மற்றும் அனுபவமுள்ள வளமுள்ள உள்ளூர் முதலீட்டாளர்கள் 2024.05.27 ஆம் திகதியிலிருந்து 2024.06.18 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் உள்ளூர் நேரம் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இ.ரூபாவை செலுத்திய பின்னர், கரடியண, தும்போவில, வள முகாமைத்துவ நிலைய ''மிஹிசரு'', WMA-WP தலைவருக்கு நிறுவன/கம்பனி தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள முன்மொழிவிற்கான முழுமையான ஆவணத் தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
3. 2024.06.19 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 2.15 மணி வரையும் கரடியண, தும்போவில, வள முகாமைத்துவ நிலைய ''மிஹிசரு'', WMA-WP தலைவருக்கு முகவரியிடப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனைத்து முன்மொழிவுகளும் நிபந்தனையற்ற கோரும் போது பெற்றுக் கொள்ளக்கூடிய விலைமனு உத்தரவாதமாகிய 30,000 ரூபாவிற்கானதும் (RFP/Bid இன் மூடும் திகதியிலிருந்து 180 நாட்களுக்கு) செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். தாமதமான முன்மொழிவுகள்/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
4. விலைமனு முன்னோடிக் கூட்டமானது இலங்கை, கரடியண, தும்போவில, வள முகாமைத்துவ நிலையமான 'மிஹிசரு' இல் 2024.06.10 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
5. கேள்விச் சபையானது முன்மொழிவை/விலைமனுவை முழுமையாக அல்லது அதிலொரு பாகத்தை ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

**தலைவர்,**
**கேள்விச் சபை,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா.),**
**''மிஹிசரு'', வள முகாமைத்துவ நிலையம்,**
**தும்போவில, கரடியண, இலங்கை.**
**தொலைபேசி : +94 11 3056703, +94 112613151**
**மின்னஞ்சல் : wmawp.gov@gmail.com**
**2024.05.27.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | தொகை | அளவு |
|---|---|---|---|---|
| RDA/DPR/PRO/GC/NCB/ADMA/2024/54 | RDA சிற்றூழியர்களுக்கான சீருடை வழங்கல் - 2024 | Lot A – கால்சட்டை துணி (கறுப்பு)<br>Lot B – சட்டை துணி (வெள்ளை மற்றும் காக்கி)<br>Lot C – புடவைகள் (சாம்பல் - சட்டை துணி உட்பட)<br>Lot D – சாரம் (வெள்ளை) | மீட்டர்<br>மீட்டர்<br>Nos<br>Nos | 3,855<br>4,548<br>170<br>08 |
| RDA/DPR/PRO/GC/NCB/ADMA/2024/74 | RDA சிற்றூழியர்களுக்கான பாதனிகள் வழங்கல் - 2024 | Lot A – பாதனிகள் (ஆண்) (கறுப்பு)<br>Lot B – செருப்புகள் (ஆண்/பெண்)<br>Lot C – பாதுகாப்பு பாதனிகள் | ஜோடி<br>ஜோடி<br>ஜோடி | 1348<br>93<br>07 |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.05.27** ஆம் திகதி முதல் **2024.06.20** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீ.அ.அ கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

SELACINE

# பெறுகை அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு (IFB)

### பொதுக் கல்வி புதுப்பித்தல் செயற்றிட்டம் (GEMP)

### மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்

### தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. வடமத்திய மாகாணத்தில் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | உருப்படியின் பெயர் | அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | NCP/ED/AC9/PC/GEMP/2024/01 | All in one Desktop Computers | 95 | 321,628.95 | 7000.00 |
| | | 650 VA UPS | 95 | 14,250.00 | |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் மூலம் கேள்வி கோரல் நடைபெறும்.

03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாத ஒருவராக இருப்பதுடன் சட்டரீதியான அதிகாரமுள்ளவரால் விநியோகிக்கப்பட்ட குறித்த துறையில் செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களை வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் (தொ.பே. 025-2222432) இடம் 2024 மே 27ம் திகதி முதல் 2024 ஜூன் 22 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 பி.ப. 3.00 இற்கு இடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கான வாய்வு வழங்கப்பட்டுள்ளது.

05. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம், தகைமை மற்றும் ஏனைய குறித்த நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06. வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு) செலுத்திய பின்னர் கேள்விதாரர்களுக்கு 2024.05.27 முதல் 2024.06.22 பி.ப. 3.00 வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதிகளை கொள்வனவு செய்யலாம்.

07. கேள்வியுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு கேள்வி பிணைமுறி இருத்தல் வேண்டும். அத்துடன் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப் பிணை முறியாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அதனை காசாகவும் செலுத்தலாம். குறித்த வங்கிப் பிணை முறி, கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் திகதி வரை செல்லுபடியாக இருப்பதுடன் நாட்டிற்குள் மாற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

08. இக்கேள்வி சமர்ப்பித்தல் மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு ஒப்பந்தம் (பெக்கேஜ்) ஆக செயற்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு ஒரு பெக்கேஜ் (இரு உருப்படி) அல்லது ஒரு உருப்படியாக கேள்வி வைக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

09. பூர்த்தி செய்த கேள்வி 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என இரு பிரதிகளுடன் தயாரிக்கப்படுவதுடன் அவ் இரு பிரதிகளையும் வேறு வேறு பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் முத்திரையிடப்பட்ட உறையில் உள்ளிடல் வேண்டும். அதன் இடது பக்க மேல் மூலையில் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல் All in one Computers & UPS' 2024 என்று ஒப்பந்த இலக்கங்களும் குறிப்பிடப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

10. கேள்விக்கு முன்னரான சந்திப்பொன்று 2024.06.12 பி.ப. 2.00 இற்கு 04ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்படும் பிரதம கணக்காளர் உத்தியோகபூர்வ அறையில் நடத்தப்படும்.

11. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் உத்தியோக பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம் வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி 2024 ஜூன் 24ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி குறித்த நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் ஆரம்பமாவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

12. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் ஒன்று அல்லது சகலதையும் அல்லது ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் எவ் வேளையிலும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிப்பதற்கு உரிய உரிமை திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணத்திற்கு உரித்தாவதுடன் அதன் காரணமாக கேள்விதாரர்/ கேள்விதாரருடன் எந்த இணக்கப்பாடும் அல்லது பொறுப்பும் கிடையாது. அத்துடன் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களளம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

TPTL

பத்திரிக்கை அறிவித்தல்

## டிரிங்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட்

### ஆர்வ வெளிப்பாடுகள் (EOI)

பெட்ரோலிய பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை சேமிப்பதற்காக ஏற்றுமதி சார்ந்த சேமிப்பு முனையத்தை இலங்கை திருகோணமலையில் உள்ள சீனக் குடாவில் நிறுவுதல்.

**Trinco Petroleum Terminal (Pvt) Ltd (TPTL)** என்பது இலங்கையின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் Lanka IOC PLC (LIOC) ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும். இதன்மூலம் தகுதியான முதலீட்டாளர்கள் அல்லது கூட்டமைப்பினை, **"திருகோணமலை, சீனக் குடாவில் உள்ள** Upper Tank Farmஇல் **61 தாங்கிகளை கட்டமைத்து,** இயக்குதல் மற்றும் பரிமாற்றல் (BOT) எனும் அடிப்படையில் மேம்படுத்துதல்" திட்டத்திற்கு தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்த அழைப்பு விடுக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் (GoSL) சார்பாக பொது தனியார் கூட்டுறவுக்கான தேசிய நிறுவனம் (NAPPP) இந்த முயற்சிக்கு உதவும்.

விவரக்குறிப்பு:
அரேபிய வளைகுடா, ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் இந்தியாவின் கிழக்கு கடற்கரைகள் மற்றும் பங்களாதேஷின் சிட்டகாங்கில் உள்ள துறைமுகங்களுக்கு செல்லும் கப்பல்களின் வர்த்தக பாதைக்கு அருகில் இலங்கையின் கிழக்கு கடற்கரையில் திருகோணமலை அமைந்துள்ளது, மற்றும் இது 4ஆவது பெரிய இயற்கை ஆழ்கடல் துறைமுகமாகும். இந்த உலகத்தில். சீன Upper Tank Farmஇல் 100 ஒரே மாதிரியான எ.்.கு சேமிப்பு தொட்டிகள் உள்ளன, ஒவ்வொன்றும் 10,000 மெட்ரிக்தொன் எரிபொருள் எண்ணெய் வேலை செய்யும் திறன் கொண்டது, புவியியல் ரீதியாக மேல் மற்றும் கீழ் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த வளாகம் பதுங்கு குழிகளை சேமிப்பதற்காக இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னதாக பிரிட்டிஷ் அரசின் கடற்படையால் கட்டப்பட்டது மேலும் அதன் மொத்த பரப்பளவு 325.5 ஹெக்டேயர் ஆகும்.

உள்நாட்டு சந்தைக்கு எரிபொருளை வழங்குவதற்காக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு இருபத்து நான்கு (24) தாங்கிகளையும், LIOCக்கு பதினான்கு (14) தாங்கிகளையும் இலஙகை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

போரின் போது ஒரு தாங்கி அழிக்கப்பட்டது, மீதமுள்ள அறுபத்தொன்று (61) தாங்கிகள், 123.12 ஹெக்டேயர் பரப்பளவில், ஐம்பது (50) ஆண்டுகளுக்கு TPTL க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த வளாகத்தை புதுப்பிக்கவும், நவீனப்படுத்தவும், ஒரு மூலோபாய பெட்ரோலிய முனையமாக மீண்டும் இதனைப் பயன்படுத்தவும் இலங்கை அரசு விரும்புகிறது. தாங்கியின் பண்ணையின் திறன் அல்லது செயல்பாடு அதிகரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படின் அதைச் சுற்றியுள்ள காலி நிலத்தில் விரிவாக்குவதன் மூலம் மேலும் அதிகரிக்கலாம்.

ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் (குறைந்தபட்சம் 9 தாங்கிகளுக்கு) தங்கள் ஆர்வத்தை (EOI) சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள், "திருகோணமலை, சீனன் குடாவில் உள்ள Upper Tank Farm இல் 61 தாங்கிகளை உருவாக்குதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (BOT) அடிப்படையில்" டிரிங்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட் பற்றிய ஆர்வ வெளிப்பாட்டை பதிவுத் தபாலில் அல்லது டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட்டின் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் வைப்பதன் மூலம் அனுப்பலாம். பின்வரும் ஆவணங்கள் மற்றும் தகவல்ளை **tptltenders@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 05/07/2024 அன்று 14.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன் மின்னஞ்சலில் அனுப்பவும்.

- கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளுடன் நிறுவனத்தின் சுயவிவரம்
- வருவாய் மாதிரியுடன் முன்மொழிவுகளை கோடிட்டுக் காட்டுங்கள்
- முக்கிய வணிகம் இல்லையென்றால், ஒத்த திட்டங்களில் அனுபவம்
- பயனுள்ளதாகக் கருதப்படும் பிற துணை ஆவணங்கள்

தொடர்புடைய விதிமுறைகள் (TOR) மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கை **www.trincopetroleum.com** என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு, பொதுவான விசாரணைகளுக்கு **tptltenders@gmail.com** பயன்படுத்தப்படலாம்.

தலைவர்
அமைச்சரவை நியமனம் செய்யப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு
மே/பா டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட்,
இல 609, கலாநிதி டானிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 09, இலங்கை.
தொலைபேசி: **+94 11 5455107** தொலைநகல்: **+94 11 5455421**
இணையதளம்: **www.trincopetroleum.com**
மின்னஞ்சல்: **tptltenders@gmail.com**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக சேவை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) நீர்க்கொழும்பு பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள்
   i. **RDA/GAM/CE/TEN/2024/25 -** ஜா-எல வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.
2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**கம்பஹா.**

SELACINE

## வடமேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நடமாடும் சோதனைப் பிரிவுக்காக ஒப்பந்த அடிப்படையில் நடமாடும் பரிசோதனை அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு

**(1) வெற்றிட எண்ணிக்கை 06**

(2) நடமாடும் சோதனை பிரிவுக்காக ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்படுவதோடு வடமேல் மாகாணத்துக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

**(3) மாதாந்த கொடுப்பனவு - ரூபா 27910.00**
i. வேறு மேலதிகக் கொடுப்பனவுகள் உள்ளன.
ii. அரச மற்றும் வார இறுதி விடுமுறை நாட்களில் பணியில் ஈடுபடுவதற்காக மேலதிக நேர மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்கு உரித்துள்ளது.

**(4) கல்வித் தகைமை:-**
i. கல்வி பொதுத் தராதர (சா/தர) பரீட்சையில் சிங்களம், தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 04 பாடங்கில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
ii. கல்வி பொதுத் தராதர (உ/தர) பரீட்சையில் குறைந்தது 03 பிரதான பாடங்களில் சாதாரண சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல்.

**(5) வேறு தகைமைகள்**
i. உயரம் 5.6'' க்கு மேல் இருத்தல் வேண்டும்.
ii. மார்பு 32'' க்கு மேல் இருத்தல் வேண்டும்.
iii. பார்வை 6-6 இருத்தல் வேண்டும்.

**(6) வயதெல்லை**
i. 18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
ii. உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

உங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை 2024.07.01 ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, ஹால்பார சந்தி, போயகனே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்கம் ''ஒப்பந்த அடிப்படையில் நடமாடும் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பு'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**
**வடமேல் மாகாணம்**

## பெறுகை அறிவித்தல்

### அலுவலக உபகரணங்களின் கொள்வனவு

### தள வைத்தியசாலை (போதனா) - கம்பளை

01. பின்வரும் அலுவலக உபகரணங்களின் வழங்கலுக்காக கம்பளை தள வைத்தியசாலை (போதனா) பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுவதுடன் 2024.06.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணி வரையும் விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
02. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் ஏகநியமனம் பெற்ற பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களே இக்கேள்வியில் பங்கு பெறுவதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
03. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள கேள்விதாரர், முகவர், பிரதிநிதி அல்லது நியமனம் பெற்றவர் அல்லது கேள்விதாரரொருவரின் சார்பானவரினால் கொள்வனவு செய்யப்பட்டு இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றுடன் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   அ) கம்பளை போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   ஆ) கம்பளை போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு ஒவ்வொரு கேள்விக்கும் ரொக்கப் பணத்தில் 2500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக வேலை நேரங்களில் செலுத்துதல்.
   இ) வியாபார பதிவு சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.
   ஈ) உள்ளூர் முகவராக முகவராண்மையினரால் நியமித்து வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்/அற்றோணித்தத்துவமொன்று.
04. 2024.05.27 ஆம் திகதியிலிருந்து 2024.06.18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் கம்பளை தள வைத்தியசாலையிலிருந்து (போதனா) விலைமனுக்கோரல் ஆவணங்கள் கையேற்கப்படலாம்.
05. 2024.06.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரை பொறிக்கப்பட்ட ஆவணங்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கம்பளை தள வைத்தியசாலை (போதனா) கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
06. 2024.06.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கம்பளை தள வைத்தியசாலை (போதனா) பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியானவர் பார்வையாளரொருவராக பங்குபற்றலாம்.

| இல. | அம்சம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை | செல்லுபடியாகும் காலம் | விலைமனுவை அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|---|
| 01 | Steel Cupboard | 05 | 40,000.00 ரூபா | 119 நாட்கள் | மருத்துவ அத்தியட்சகர், தள வைத்தியசாலை, கம்பளை |
| 02. | Mid Back Chair | 20 | | | |
| 03. | Gang Chair Set | 02 | | | |
| 04. | LED Monitor 19" | 04 | | | |
| 05. | 650VA UPS | 11 | | | |
| 06. | Electric Boiler 20 Liter | 01 | | | |
| 07. | Cloth Cutter | 01 | | | |
| 08. | Desktop Computer | 01 | | | |
| 09. | Inkjet Printer | 02 | | | |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தள வைத்தியசாலை (போதனா),**
**கம்பளை.**

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...




Green Light for Online Transfer
BOC
Lake House Branch
Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - அம்பாறை

### மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனை

மக்கள் வங்கி அம்பாறை தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை நிலையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 11.06.2024 ம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் 12.06.2024 மற்றும் 13.06.2024**

| | |
|---|---|
| **ஏல விற்பனை நிகழும் இடங்கள்** | பிராந்திய தலைமைக் காரியாலயம், அம்பாறை. |
| **கிளைகள்** | அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், மஹாஓயா, உஹண, காரைதீவு, திருக்கோவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், சாய்ந்தமருது, மருதமுனை. |
| **சேவை நிலையங்கள்** | இறக்காமம், நவகம்புர, ஆலையடிவேம்பு, விளினியடி, சம்மாந்துறை, பாணம, பதியத்தலாவ, கொணாகொல்ல, மத்திய முகாம், ஒலுவில், பாலமுனை. |

இந்த ஏலவிற்பனைகளை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், இல.96/A, டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, அம்பாறை. தொலைபேசி இல. 063-2222516

www.peoplesbank.lk
PEOPLE'S BANK
Pride of the Nation

## விலைமனுக்களுக்கான வேண்டுகோள் (RFB) – வேலைகள்

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

நீர்ப்பாசன அமைச்சு

நீர்ப்பாசனத் திணைக்களம்

**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை செயற்றிட்ட அடையாளம் - P 160005 / கடன் இலக்கம்: IBRD-89960**

# தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

**விலைக்கோரல் இலக்கம்: : CResMPA-1/RP/WORKS/ID-GAM/NCB/001, 009 & 023**

1. காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (**CResMPA)** கிரயச் செலவிற்காக மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது என்பதுடன் இந்தக் கடனின் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் கீழான தகுதியான கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தவுள்ளது. தகுதியுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
2. கம்பஹா மாவட்டத்தினுள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு - நீர்ப்பாசனப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த பொதி இலக்கம் | வேலையின் பெயர் | முடிவுறுத்தும் காலம் (நாட்கள்) | ICTAD (ஆகக் குறைந்த தரம்) நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால மைப்பின் கீழ் | விலைக்கோரல் பிணை முறி | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | வருடாந்த நிர்மாணப் புரள்வு (இல. ரூபா மில்லியன்) | நிதி வளம் (இல. ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (இல. ரூபா) | காலம் (நாட்கள்) | | | |
| CResMPA-1/RP/WORKS/ ID-GAM/NCB/001 | கொழும்பு வரம்பில், கம்பஹா மாவட்டத்தில் உள்ள பெம்முல்ல தொரணகொட கால்வாயில் ஹொரகந்தவில வடிகாலமைப்பிற்கு புதிய பாலமொன்றை நிர்மாணித்தல் | 06 | C7 | 120,000.00 | 105 (2024-10-01ஆம் திகதி வரை) | 77 | 13.0 | 5.0 |
| CResMPA-1/RP/WORKS/ ID-GAM/NCB/009 | மா-ஓவிட்ட அணைக்கட்டில் தீ எலிய ஓயவில் 0+000 முதல் 0+400 வரை LBMC வீதிக்கு கிரவலிடுதல் மற்றும் அகலப்படுத்துதல் மற்றும் மா-ஓவிட்ட LBMC யில் 0+400 முதல் 0+410 வரை தேய்மானத்தை தடுக்கும் கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் | 06 | C6 | 150,000.00 | 105 (2024-10-01ஆம் திகதி வரை) | 77 | 18.0 | 6.0 |
| CResMPA-1/RP/WORKS/ ID-AM/NCB/0023 | கம்பஹா பிரிவிலுள்ள தம்மிட்ட திட்டத்தில் LBMC இற்கு 150 மீற்றர் நீளமான கால்வாய் லைனிங் நிர்மாணித்தல் | 06 | C7 | 125,000.00 | 105 (2024-10-01ஆம் திகதி வரை) | 77 | 14.0 | 5.0 |

3. தகைமைத் தேவைப்பாடுகள்: விலைமனுதாரர் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ளார் என ஆவண ரீதியாக விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகாலமைப்பில் விசேடத்துவமாக ஆகக் குறைந்த ICTAD/CIDA செல்லுபடியாகும் தரப் பதிவு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஆகக்குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
   - மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தம்வசமுள்ள நிதி வளம் அல்லது கிடைக்கும் வழிகளை விலைமனுதாரர் விளங்கப்படுத்துதல் வேண்டும்.
   - பொதுவான அனுபவம் - கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரர் பாத்திரத்தின் கீழான அனுபவம்
   - விசேடத்துவ அனுபவம் - கடந்த பத்து (10) வருடங்களில் வெற்றிகரமாகவும், கணிசமாக நிறைவு செய்யப்பட்ட குறைந்தபட்சம் இதனையொத்த இயல்பைக் கொண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக்காரர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக பங்குபற்றியிருத்தல்.
   - கடந்த பத்து (10) வருடங்களில் நீர்ப்பாசன கால்வாய்களின் மண் வேலைகள் மற்றும் நிர்மாணம் அல்லது கால்வாய் கட்டமைப்பு திருத்தவேலைகளில் முக்கிய செயற்பாட்டு அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
4. IPF கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் 2020 பெறுகை ஒழுங்கு விதிகளின் 04வது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக பொருட்கள், வேலைகள், ஆலோசனை அல்லாத மற்றும் ஆலோசனை சேவைக்கான பெறுகையின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைக்கோரல்கள் இடம்பெறும் என்பதுடன் பெறுகை வழிகாட்டியில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிவாய்ந்த விலைமனுதரர்களுக்கு இது திறந்திருக்கும். மேலதிகமாக உலக வங்கியின் ஆர்வ முரண்பாட்டு கொள்கையின் 1.6 மற்றும் 1.7 பந்திகளை தயவு செய்து பார்க்கவும்.
5. விலைமனுதாரர்கள் 2024-05-27ஆம் திகதி முதல் 2024-06-17ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.30 மற்றும் பி.ப. 2.30 மணித்தியாலத்திற்கிடையில்) ஒவ்வொரு தொகுதிக்கும் **CresMPA-1/RP/WORKS/ID-GAM/NCB/001** மற்றும் **CresMPA-1/RP/WORKS/ID-GAM/NCB/023**ஒப்பந்தப் பொதிக்காக 3,500.00 இலங்கை ரூபாவையும் **CresMPA-1/RP/WORKS/ID-GAM/NCB/009** ஒப்பந்தப் பொதிக்காக 4,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் கொழும்பு-05, 1415, ஜாவத்த வீதி, கொழும்பு பிராந்திய அலுவலகம், நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து (கொழும்பு) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை (இரு நகல்களில்) கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் அவற்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (கொழும்பு) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **0112 588 668.**
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-05ஆம் திகதி கொழும்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் 2024-06-04ஆம் திகதி பின்வரும் அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இலக்கம் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்ட நேரம் | வேலைத்தள விஜயம் | | அதிகாரியின் பெயர் | தொடர்பிலக்கம் |
|---|---|---|---|---|---|
| | | இடம்பெறும் இடம் | இடம்பெறும் நேரம் | | |
| CResMPA-1/RP/WORKS/ ID-GAM/NCB/001 | மு.ப. 09.30 | DIE அலுவலகம், கம்பஹா | மு.ப. 09.00 | பொறி. R.A.R.V. கிறிஷாந்த | 0332 234 274 |
| CResMPA-1/RP/WORKS/ ID-GAM/NCB/009 | மு.ப. 10.30 | DIE அலுவலகம், கம்பஹா | மு.ப. 11.00 | பொறி. R.A.R.V. கிறிஷாந்த | 0332 234 274 |
| CResMPA-1/RP/WORKS/ ID-AM/NCB/0023 | பி.ப. 11.30 | DIE அலுவலகம், கம்பஹா | பி.ப. 2.00 | பொறி. R.A.R.V. கிறிஷாந்த | 0332 234 274 |

8. 2024-06-18ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கொழும்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024-06-18ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில்திறக்கப்படும்.

   **தலைவர்,**
   **பிராந்திய பெறுகைக் குழு,**
   **கொழும்பு பிராந்திய அலுவலகம்,**
   **1514, ஜாவத்த வீதி,**
   **கொழும்பு-05.**

9. சகல பொதிகளுக்கும் அல்லது பட்டியலில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பொதிகளுக்காக விலைமனுதாரர்கள் சுதந்திரமாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். எவ்வாறாயினும் பல பொதிகளுக்காக தகுதியைப் பெறும் பட்சத்தில், மிகவும் சாதகமான பொருளாதார நன்மைகளைக் கவனத்திற்கொண்டு ஒரு விலைமனுதாரருக்கு வழங்கப்படும் பொதிகளின் எண்ணிக்கையை தொழில் வழங்குநர் தீர்மானிப்பார்.
   கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''(ஒப்பந்த இலக்கம்) என்பதற்கான விலைமனு'' என தயவு செய்து எழுதவும்.
   சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   **நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
   **கொழும்பு பிராந்திய அலுவலகம்,**
   **1514, ஜாவத்த வீதி,**
   **கொழும்பு-05.**

**திகதி: 2024-05-27.**

# எல்.பி.எல். தூதுவராக கிளார்க் நியமனம்

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் கிளார்க் லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரின் பிராண்ட் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இம்முறை எல்.பி.எல். தொடர் எதிர்வரும் ஜூலை 1 தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் அந்தத் தொடரில் கிளார்க் முக்கிய பங்கு வகிக்கவுள்ளார்.

'நான் விளையாடுவதற்கு விருப்பத்துடன் இருந்த இலங்கைக்கு மீண்டும் வரும் வரை எனக்கு பொறுமை இல்லை. எனக்கு அங்கு வருவது மாத்திரமன்றி, வந்து தூதுவர் ஒருவராக பணியாற்றுவதற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பல திறமையானவர்கள், இளம் வீரர்கள், மற்றும் சிறந்த வெளிநாட்டு வீரர்களும் உள்ளனர்.

இந்தத் தொடர் வெற்றிகரமான தொடர் ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை' என்று கிளார்க் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணித் தலைவராக செயற்பட்ட கிளர்க் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் அவுஸ்திரேலிய அணிக்கு வென்று கொடுத்தார்.

கிளார்க்கின் நியமனத்தை வரவேற்றிருக்கும் எல்.பி.எல். ஏற்பாட்டாளரான இனொவேடிவ் புரொடக்ஷன் குழுமத்தின் தலைவர் அனில் மோஹன், அவரது அனுபவம், தலைமைத்துவம் மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வம் வீரர்கள் மற்றும் ரசிகர்களிடம் தாக்கம் செலுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

கிளார்க்கின் நியமனம் தொடர்பில் தொடரின் பணிப்பாளரான சமந்த தொடன்வலவும் உற்சாகத்தை வெளியிட்டுள்ளார்.

# உலக பரா சம்பியன்சிப்பில் இலங்கை மூன்று பதக்கம்







ஜப்பானின் கொபேவில் நடைபெற்ற உலக பரா மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை ஒரு வெள்ளி மற்றும் இரு வெண்கலம் என மூன்று பதக்கங்களை வென்றுள்ளது.

டயலொக் அக்சியாட்ட பீஎல்சி அனுசரணையில் பங்கேற்ற இலங்கை வீரர்களில் குறுந்தூர ஓட்ட வீரரான இந்திக்க கமகே டீ44, 100 மீற்றர் ஓட்டத்தில் 11.38 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து வெண்கலப்பதக்கம் வென்றார்.

இதில் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திக்க கமகே உலக சாதனையுடன் வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார். எப்44 பிரிவில் போட்டியிட்ட அவர் 66.49 மீற்றர் தூரத்தை வீசினார். நேற்று முன்தினம் (25) நடைபெற்ற ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் பாலித்த பண்டார 14.27 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலம் வென்றார்.



மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி சுகததாச அரங்கில் கடந்த சனிக்கிழமை (25) நடைபெற்றது. இதில் விசேட அதிதியாக கலந்துகொண்ட கோட்டே நாக விகாரை பஸ்நாயக்க நிலமே தம்மிக்க குரே, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி ஹரேன்திர காரியவசம் மற்றும் சட்டத்தரணி பிரியங்க ஜயசேகர ஆகியோர் ஓட்டப்போட்டியை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: சின்தக குமாரசிங்க)

# சோபர் அணி சம்பியன்



ஒலுவில் கிழக்கு தினகரன், மளிகைக்காடு குறூப் நிருபர்கள்

விநாயகபுரம் விநாயகர் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 60 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை (24) விநாயகர் மைதானத்தில் நடைபெற்றது. இதில் விநாயகர் அணியை எதிர்கொண்ட சோபர் 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்டநாயகனாக சோபர் அணியின் றப்சான் தெரிவானதோடு தொடர் நாயகன் விருதை விநாயகர் அணியின் கவி கைப்பற்றினார்.

## சர்வதேச செய்திகள்



# பப்புவா நிலச்சரிவில் 670 பேர் வரை புதையுண்டு இருக்கலாமென அச்சம்

பப்புவா நியூ கினியில் இடம்பெற்ற பாரிய நிலச்சரியில் சுமார் 670 பேர் புதையுண்டிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

தொலைதூர எங்கா மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலச்சரிவின் பாதிப்பு முன்னர் நம்பப்பட்டதை விடவும் அதிகமாக உள்ளது என்று பப்புவா நியூ கினியில் புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதே அமைப்பின் தலைவர அக்டோப்ரக் தெரிவித்துள்ளார்.

'150க்கும் மேற்பட்ட வீடுகள் புதையுண்டிருப்பதாக தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்மேற்கு பசுபிக் தீவு நாட்டின் வடக்கில் உள்ள எங்கா மலைப் பிரதேசத்திலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றது. நிலச்சரிவு அபாயம் தொடர்ந்து இருப்பதால் மீட்பாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருப்பதாக அக்டோப்ரக் தெரிவித்தார்.

நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் சுமார் 4,000 மக்கள் வசித்து வந்துள்ளனர்.

எனினும் பழங்குடியினரின் மோதல்கள் காரணமாக அதிகமான மக்கள் தப்பி வந்திருக்கும் சூழலில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கக் கூடும் என்று நிவாரண பணிகளுக்கு உதவி வரும் மனிதாபிமான நிறுவனமான கெயார் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

மக்கள் உறங்கிக்கொண்டிருந்த அதிகாலை நேரத்தில் இடம்பெற்ற இந்த நிலச்சரிவில் இருந்து நேற்று ஐந்து உடல்கள் மாத்திரம் மீட்கப்பட்டன.

இந்த நிலச்சரிவில் மிகப்பெரிய பாறைகள், மரங்கள் மற்றும் மண் அடித்து வரப்பட்டிருப்பதோடு சில பகுதிகள் 26 அடி உயரம் வரை புதையுண்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்கு அனைத்து வழிகளையும் மீட்புப் பணியாளர்கள் பயன்படுத்துவதாக அக்டோப்ரக் கூறினார்: 'மண்ணுக்கு அடியில் புதைந்த உடல்களை மீட்பதற்கு குச்சிகள், மண்வெட்டிகள், பெரிய விவசாய முள்கரண்டிகள் என கிடைக்கும் அனைத்தையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர்' என்று அவர் தெரிவித்தார்.

# சர்வதேச அழுத்தத்திற்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேலிய தாக்குதல் தீவிரம்



## போர் நிறுத்தத்திற்கு புதிய இராஜதந்திர முயற்சி

காசா மீதான இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் நேற்றைய (26) தினத்தில் தொடர்ந்தபோதும் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் எதிர்வரும் நாட்களில் ஆரம்பிக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, மத்திய மற்றும் தெற்கு காசா பகுதியில் நேற்றும் வான் தாக்குதல்கள் மற்றும் பீரங்கி குண்டுகள் விழுந்த வண்ணம் இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தூரத் தெற்கு பகுதியான ரபாவில் மோதல் தீவிரம் அடைந்திருப்பதோடு அங்கிருக்கும் ஹமாஸின் கடைசி கோட்டையை அழிப்பதாக இஸ்ரேல் கூறி வருகிறது. எனினும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இந்தப் பகுதி மீதான படை நடவடிக்கைக்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன.

மே மாத ஆரம்பத்தில் ரபா மீதான படை நடவடிக்கையை இஸ்ரேல் தொடங்கியதை அடுத்து அங்குள்ள எகிப்துடனான எல்லைக் கடவை இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது. இதனை அடுத்து காசாவுக்கான உதவிகள் செல்லும் முக்கியமான அந்த வாயில் மூடப்பட்டது. இந்நிலையில் எகிப்தில் காத்திருக்கும் உதவி வாகனங்கள் மற்றொரு எல்லைக் கடவையான கெரம் ஷலோம் வழியாக காசாவுக்குள் நுழைந்து வருகின்றன. பணயக் கைதிகளை விடுவிக்கும் வகையில் அவசர போர் நிறுத்தம் ஒன்றுக்கான இராஜதந்திர முயற்சியில் தமது நிர்வாகம் ஈடுபட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

எகிப்து மத்தியஸ்தர்களும் போர் நிறுத்தத்திற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருப்பதாக எகிப்து உளவுப் பிரிவுடன் தொடர்புபட்ட அல் கஹெரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பாரிஸில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் மற்றும் கட்டார் மத்தியஸ்தர்களை சந்தித்த இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் தலைவர் டேவிட் பார்னீ போர் நிறுத்தம் ஒன்றுக்கான புதிய பேச்சுவார்த்தைக்கு இணங்கி இருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வாரத்திற்குள் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக பெயரை வெளியிடாத இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் இந்த விடயத்தில் இதுவரை நடைமுறை சாத்தியமான எதுவும் இடம்பெறவில்லை என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான ஒசாமா ஹம்தான், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். அது இஸ்ரேல் பக்கம் இருந்து மாத்திரம் வரும் செய்தி என்று அவர் குறிப்பிட்டார்.



### இஸ்ரேலிய வீரர் கடத்தல்

காசாவில் பலஸ்தீனர்களின் பிடியில் இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு இஸ்ரேலுக்குள் அழுத்தம் அதிகரித்து வருவதோடு டெல் அவிவில் நேற்று முன்தினமும் இஸ்ரேல் அரசுக்கு எதிராக பாரிய பேரணிகள் இடம்பெற்றன.

காசாவில் இருந்து அண்மைய நாட்களில் பணயக் கைதிகளின் ஏழு சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் எஞ்சியிருக்கும் பணயக்கைதிகள் தொடர்பில் உறவினர்கள் இடையே அச்சம் அதிகரித்துள்ளது.

உயிரிழந்த பணயக்கைதிகளுக்காக டெல் அவிவ் பேரணியில் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

'இந்தத் தருணம் பற்றி நான் அஞ்சுகிறேன்' என்று காசாவில் இருந்து சடலாமாக மீட்கப்பட்ட சனான் என்பவரின் சகோதரர் அவிவிட் யப்லொன்கா பேரணியில் வைத்து தெரிவித்தார். 'அனைத்து பணயக் கைதிகளும் வீடு திரும்புவதற்காக நான் தொடர்ந்து கூச்சலிட்டும், கோசம் எழுப்பியும் போராடியும் வருவேன்' என்று அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் வடக்கு காசாவின் ஜபலியாவில் மறைந்திருந்து நடத்திய தாக்குதல் ஒன்றின் மூலம் குறைந்தது ஒரு இஸ்ரேலிய வீரரை ஹமாஸ் அமைப்பு கைதியாக பிடித்துள்ளது. எனினும் இதனை இஸ்ரேல் இராணுவம் மறுத்திருப்பதோடு படை வீரர் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் ஒன்று நிகழவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போரில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 36 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 80க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரபா மீதான தாக்குதல்களை நிறுத்த கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்ட போதும் இஸ்ரேல் பொருட்படுத்தாது தாக்குதல்களை தொடர்ந்து வருகிறது. ரபாவின் கிர்பட் அல் அடாஸ் பகுதியில் இஸ்ரேலியப் படை நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

நுஸைரத் அகதி முகாமை இலக்கு வைத்து இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தி இருப்பதோடு வடக்கு காசாவில் கடுமையான பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசா நகரில் இஸ்ரேல் டாங்கிகள் செய்தூன் மற்றும் நெட்சரிம் பகுதிகளை இலக்குவைத்து கடுமையாக சூடு நடத்தியதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ரபாவில் இருந்து மத்திய இஸ்ரேலை நோக்கி நேற்று ரொக்கெட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் டெல் அவிவ் தவிர ஹெர்ஸ்லியா மற்றும் பெலா டிக்வா உட்பட இஸ்ரேலின் பல நகரங்கள் மற்றும் சிறு நகரங்களில் சைரன் ஒலி எழுப்பப்பட்டது.

இதன்போது ரொக்கெட்டுகளை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைப்பு இடைமறித்ததோடு சில ரொக்கெட் குண்டுகள் பல இடங்களிலும் விழுந்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இந்த ரொக்கெட் தாக்குதல்களுக்கு ஹமாஸ் ஆயுதப் பிரிவு டெலிகிராமில் பொறுப்பேற்றுள்ளது.

பெரும்பாலான மருத்துவமனைகள் செயலிழந்திருக்கும் சூழலில் காசாவில் பஞ்சம் நெருங்கி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.